SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

Telegrams: "GUARDIAN" JAFFNA.

Telephone: No. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது விருதா"

75-ம் புத்தகம் 6-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு மாசிமாசம் 9-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## அன்பு நெறி

தமிழ்ப் பெரியார்: திரு. வி. க.

> ஆசை வெறியால் நாசகார அலுவலில் ஆழ்ந்திருக்கும் அறிஞர் உலகம் கிறீஸ்துவின் போதனையை மேற்கொண்டால்தான் உலகம் உய்வடையும் என்பதை விளக்குகின்றார் 'நல்லாயன்' ஆண்டுமலரிலே அப்பெரியார்.

இரண்டாம் உலகப்போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆயின. அப்போர் முழக்கம் இன்னும் செவியைக் குடைந்து வருகிறது. கொடிய இரண்டாம் உலகப்போரால் விளைந்த கேடுகள் இன்னும் ஒழியவில்லை. பஞ்சமும், பட்டினியும், பிணியும் இன்னபிறவும் உலகை அரித்து வருகின்றன. இந்நிலையில் மூன்றும் உலகப்போர் மக்களால் பேசப்படுகிறது. என்னே உலகம்!

சரித்திர உலகம் எவ்வாறு காணப்படுகிறது? போர்வண்ணமாகக் காணப்படுகிறது. அலெக்ஸான்டர், நெப்போலியன், கெய்ஸர், ஹிற்லர் முதலியோர் வரலாறுகளைச் சிந்தித்துப்பார்க்க. உலகில் நடந்த இரத்தப்புரட்சிகளும் மறக்கற்பாலன அல்ல.

போருக்கு அடிப்படையான காரணங்களைப் பலபடக் கூறலாம். அவற்றுள் சிறந்த ஒன்றை ஈண்டு குறித்தல் நலம். அஃது எது? அது மூர்க்கம். மூர்க்கம் உள்ளவரை, உலகை விடுத்துப் போர் அகலாது. வாள், துப்பாக்கி, பீரங்கி, எரிகுண்டு, அணுக்குண்டுமுதலியன எங்கிருந்து பிறக்கின்றன? இவை மூர்க்கத்திலிருந்தே பிறக்கின்றன. இதற்கு ஆராய்ச்சி வேண்டுவதில்லை.

"வாளெடுப்பவன் வாளாலே மாள்வன்" என்பது கிறீஸ்து பெருமான் போதனைகளுள் ஒன்று. அவர்தம் போதனையும் சாதனையும் உலகில் பரவப்பரவ மூர்க்கப்போர் ஒழியும். அப்போர் ஒழியும்காலத்தை உலகம் காணுமோ? காணும் என்று யான் நம்புகிறேன்; உறுதியாக நம்புகிறேன்.

முதல்உலகப்போர் சமாதானத்துக்கென்று சர்வதேச சங்கத்தை ஈன்றது. அச்சங்கத்தால் சமாதானம் விளைந்ததா? இல்லை. பின்னை என்ன விளைந்தது? இரண்டாம் உலகப்போர் விளைந்தது. இப்போர் ஐக்கிய நாட்டமைப்பைத் தோற்றுவித்தது. இவ்வமைப்பாகுதல் கொலைப்போரை நிறுத்தவல்லதாகுமோ? ஆகாது. ஏன்? ஐக்கிய நாட்டமைப்பின் உள்ளத்தில் உலவும் எண்ணங்கள் விடைபகரும்.

மூன்றும் உலகப்போர் நிகழுமா நிகழாதா என்று சோதிடம் கேட்போரும் உளர். அப்போர் நிகழ்வதும், நிகழாமையும் மக்களின் மனோநிலையைப் பொறுத்துள்ளன. மக்கள் மனதில் கிறீஸ்துபெருமான் போதனையும் சாதனையும் நிலைத்து, வாழ்க்கையாயின் போர்நிகழாது. இல்லையேல் கொலைப்போர் நிகழ்ந்தேதீரும்.

கிறீஸ்துபெருமான் சிலுவையில் ஆணியால் அறையப்பட்டபோது, அவர்தம் நெஞ்சில் சீற்றம் எழவில்லை. அன்பே கனிந்துநின்றது. அக்கனிவு, ஆணி அறைந்தவரது அறியாமைக்கு இரங்கச்செய்தது. பெருமான்: "இவர் என்ன செய்கிறாரென்று இவருக்குத் தெரியவில்லை. ஆண்டனே இவரை மன்னியும்" என்று அருளினர்.

உலகில் நடைபெறும் தீயசெயல்கட்கு மூலகாரணம், அறியாமை. அறியாமைக்குத் தண்டனை விதிப்பதா? அதை அன்பால் மன்னிப்பதா? மனமே! உன்னிப்பார்க்க. கிறீஸ்து பெருமான், கொலைஞரின் அறியாமையை அன்பால்பொறுத்தார்; அவர்தம் அறியாமைக்கு இரங்கினர்; மன்னிப்பையும் வழங்கினர். இவ்வாறே மக்கள் அறியாமைக்குத் தண்டனையைக் கொள்ளாது, அன்பால் மன்னிப்பைக்கொண்டு, வாழ்க்கை நடாத்தும்பயிற்சி உலகுக்குத் தேவை. இதற்குக் கிறீஸ்துவம் வேண்டும்.

இந்தியா இப்பொழுது ஒருவித விடுதலைபெற்றது. இவ்விடுதலைக்குக் காந்தியடிகள் இரத்தப்புரட்சியையோ, மூர்க்கப்போரையோ நிகழ்த்தினரில்லை. அடிகள் மலைப்பொழிவை அழுதென உண்டு, என்புத்துளை தோறும் தேக்கி, கிறீஸ்துவ மயமாய், அஹிம்சாதர்மப் போர் புரிந்தார். அப்போரைப் பிரிட்டிஷார் கொலைக்கருவிகள் கொண்டெதிர்த்தாரில்லை. அவர் தாமே வலிந்து இந்தியாவுக்கு விடுதலை நல்கினர். இது காந்தியடிகள்கொண்ட, கிறீஸ்துவத்தின் மாண்பை விளக்குவதாகும். கொலைப்போரை ஒழிக்கவல்லது கிறீஸ்துவம் — கிறீஸ்துவம் என்று அறைகூவலாமன்றோ?

கிறீஸ்துவின் அன்புநெறி,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## சின்னயசிந்தாவின் செபமும் தபமும்

(எஸ். பெனடிக்ற்—பண்டத்தரிப்பு)

(முன்தொடர்ச்சி)

ஒருநாள்பத்திமாவின் மூன்று சிறுவரும் 'கெபிக்கோ' என்ற குகையின்பக்கத்தில் செபித்துக் கொண்டிருந்தனர். திடீரெனச் "சின்னயசிந்தா" எழுந்து லூசியாவைப்பார்த்துச் சொன்னதாவது: "லூசியா! அங்கேபார்! அந்தவீதிகளும், வயல்களும், சனங்களால் நிறைந்திருக்கின்றன. அந்தச்சனங்களோ உண்ண ஒன்றுமில்லாமல் அழுது கொண்டிருக்கிறார்கள். ஒரு கோவிலுக்குள் பரிசுத்தபாப்பாண்டவர் இருதயநாயகிக்கு முன்செபஞ்செய்துகொண்டிருக்கின்றார் அவரோடு ஒருகூட்டம் சனங்களும் இருக்கின்றார்கள்." இச்சம்பவம் யசிந்தாவின் தீர்க்கதரிசனத்தை எடுத்துக்காட்டுகின்றது. இச்சம்பவத்தைஅவளுடன்கூட இருந்தவர்கள் காணாவிடினும் பிற்காலத்தில் இச்சம்பவம் மெய்யாகவே நடந்திருப்பதை லூசியாஅறிந்தாள்.

இத்தீர்க்கதரிசனத்தின்முதல் பகுதி யுத்தகாலத்திலேயேநடந்திருக்கின்றது. இரண்டாவது உலகயுத்தத்தின் கொடூரத்தினல் போலாந்து, பெல்ஜியம் ஒல்லாந்து, பிரான்ஸ், கிறீஸ் ஜேர்மனிமுதலிய தேசங்களில் உள்ளசனங்கள் உண்ணஉணவும், உடுக்கஉடையும், தங்க இல்லிடமுமின்றித் தெருநீளம் அலைவதை நாம்அறிவோம்.

தீர்க்கதரிசனத்தின் இரண்டாம்பகுதி 1942-ம் ஆண்டு திருச்சபையில்நடைபெற்ற முக்கிய சம்பவம்ஒன்றை ஞாபகமூட்டுகின்றது. பத்திமாவில் தேவதாய்காணப்பட்டு 25 வருடங்களின்பின் அதாவது 1942-ம் ஆண்டில் அவரதுவிருப்பப்படி பரிசுத்தபிதா 12-ம்பத்திநாதர் அர்ச். இராயப்பர் தேவாலயத்திலே உலகின் பலபாகங்களிலுமிருந்து வந்துகூடிய கருதினல்மார், மேற்றிராணிமார், குருமார், சனத்திரள் முன்னிலையில் அகிலஉலகத்தையும் மரியாயின் மாசற்றஇருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கும் மாபெரும் வைபவத்தை நிறைவேற்றினர்.

பரிசுத்த பாப்பாண்டவருக்கு எவ்வளவோ இடையூறுகளும், கவலைகளும் நேரிடும் எனவும் சின்னயசிந்தா அறிந்திருந்தாள். ஒருநாள் இரண்டுகுருமார் பத்திமாவின் மூன்று சிறுவரையும் சந்திக்கவந்தனர். அவர்கள் சிறுவரைவிட்டுப் பிரியும்போது பாப்பாண்டவருக்காக வேண்டிக்கொள்ளுமாறுகூறிச் சென்றனர். யசிந்தா பின்னர் லூசியாவைப்பார்த்து: "லூசியா, நீ பாப்பாண்டவரைக் கண்டிருக்கிறாயா?" என்று வினவினள். "இல்லையசிந்தா, நான் அவரைக் காணவில்லையே" என லூசியா பதிலளித்தாள். "ஆனல், நான் அவரைக்கண்டேன்....ஆம் பாப்பாண்டவரைக்கண்டேன்- ஒரு பெரியமாளிகையில் ஒருசிறு மேசைக்குமுன்னல் கவலையுடன் தமதுகைகளால் தலையைத் தாங்கிக்கொண்டு முழந்தாளில் இருக்கக்கண்டேன்....பாவம்எத்துணைபெருங்கவலையுடன் அவர் காணப்பட்டார்" என யசிந்தா கூறினள்.

பாப்பாண்டவருக்காக நாங்கள்நன்றாய் மன்றாடவேண்டும் என அவள் அடிக்கடி கூறுவாள். அவரைப்பற்றித் தேவதாயார் எங்கட்குச் சொல்லியிருக்கிறார் அல்லவா? என அவள்தன்சிநேகிதருக்குநினைப்பூட்டுவாள். மூன்றுசிறுவரும் செபஞ்செய்யும்போதும், தபக்கிருத்தியங்களை ஒப்புக்கொடுக்கும்போதும் பரிசுத்த பாப்பாண்டவருக்காகவும்என யசிந்தா வேண்டிக் கொள்ளுவாள்.

அவள்கடைசியாகலூசியாவை விட்டுப்பிரியும்போது கூறினதாவது: "மோட்சத்திலே உனக்காகவும், எங்கள்தேசத்திற்காகவும் பரிசுத்தபாப்பாண்டவருக்காகவும் வேண்டிக்கொள்ள மறக்கமாட்டேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாயின் சேனை

### 7-ம் அதிகாரம்

(முன்தொடர்ச்சி)

B. உதவிஅங்கத்தினர்: ஊழிய அங்கத்துவத்தின் கடமைகளை ஏற்க இயலாதவர்கள் அல்லது விருப்பம்இல்லாதவர்கள் உதவி அங்கத்தினராகச் சேர்ந்து சேனைக்குத் தங்கள்செபங்களின்ஆதாவைக் கொடுக்கலாம். தெசராஎன்னும் செபத்திண்டிலுள்ள செபங்கள்யாவையும் அதாவது, இஸ்பிரீத்துசாந்துசெபம், ஐம்பத்துமூன்றுமணிச் செபமாலை, (ஐந்துகோர்வை) அதற்குப்பின்வரும் மன்ருட்டுக்கள், சங்கிலிச்செபங்கள், கடைசிச்செபங்கள் ஆகிய இவைகள்யாவையும அநுதினம்சொல்லுவதே இவர்களின் கடமை. இந்தச்செபங்கள்அடங்கிய திண்டுப்புத்தகமே தெசராஎன்றுசொல்லப்படுகிறது. இந்தத்தெசராவை மரியாயின்சேனை இருக்கும் இடங்களில் சேனைத்தலைவரிடம் விலைக்குப்பெற்றுக் கொள்ளலாம். இந்தச்செபங்கள்யாவையும் ஒரேநேரத்தில் தொடர்ச்சியாய்ச் சொல்லிமுடிக்க வேண்டுமென்பதில்லை. இவைகளைப் பாகம்பாகமாகப்பிரித்து ஒவ்வொருபாகத்தையும் வசதிபோல வெவ்வேறுவேளைகளில் சொல்லலாம்.

உதவிஅங்கத்தினரின்சேவை பரிசுத்தகன்னிமரியாளின் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். சகலவரப்பிரசாதங்களினதும் மத்தியஸ்தியாகிய அமலோற்பவமரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்றமன்ருட்டை உதவிஅங்கத்தினர் தெசராவில் சேர்க்கவேண்டும்.

ஊழியஅங்கத்தினர் மாத்திரமல்ல, உதவிஅங்கத்தினரும் ஓயாது ஆயுதமுங்கையுமாய் இருக்கவேண்டும்.

C. மெய்காவலர் அங்கத்துவம்:— இதுஊழியஅங்கத்துவத்தின் உயர்ந்த தரம். மெய்காவலருக்கு ஊழிய அங்கத்துவத்தின் கடமைகள்போக, வேறு மூன்றுகடமைகளும் உண்டு. 1-வது தினந்தோறும்சேனை தெசராவிலுள்ள செபங்கள்யாவையும்சொல்லவேண்டும். 2-வது தினந்தோறும் திவ்வியபூசை கண்டு தினந்தோறும் திவ்வியநன்மை வாங்கவேண்டும். தினந்தவருது திவ்வியபூசைகாண்பதோ, தினந்தவருது திவ்வியநன்மைவாங்குவதோ சாத்தியப்படாதென்று பயந்து மெய்காவலர் எவரும் அங்கத்துவம் வகிப்பதற்குப் பின்வாங்கலாகாது. அவ்விளவுதவருதகிரமம் தங்களுக்குச் சாத்தியமென்று எவராலும் நிச்சயமாய் நம்பமுடியாது. ஆதலின் சாதாரணசந்தர்ப்பங்களின் கீழ் வாரம்ஒருமுறைக்குமேல் தவருதவர்கள் தைரியமாய் மெய்காவலர் அங்கத்துவம்பூணலாம். 3-வது பரிசுத்த கன்னிமரியம்மாள் மந்திரமாலை, அமலோற்பவமாதா மந்திரமாலை, (ஐந்துகாயப்பிரான்சீஸ் மூன்ருவதுசபையைச் சேர்ந்தவர்கள்என்ருல்) அச்சபை மந்திரமாலை, பிரிவியரி, அநுதினதேவாராதனையின்பெறுமதியானபாகம்ஒன்று இவைபோன்ற திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒன்றைத் தினந்தோறும் சொல்லவேண்டும்.

குறிப்பு:—ஊழிய அங்கத்தினராய் அல்லதுஉதவிஅங்கத்தினராய்ச் சேர விரும்புவோர் யாதேனுமொரு பிரஸீடியத்திற்கு விண்ணப்பம்அனுப்பி அச்சேனையில் அங்கத்துவம் கேட்கவேண்டும்.

### 8-ம் அதிகாரம்

#### சேனையாளரின் கடமைகள்

1. கூட்டத்துக்குச் செலுத்த வேண்டிய மரியாதை:— சேனையின் சக்தி பரவுவதற்கு இணைப்பு அவசியம். ஒழுங்காகக் கூட்டங்களுக்குச் சமுகங்கொடுக்கும் ஓர் அங்கத்தினர், கடமையைக் கழிப்பதற்காகக் கூட்டங்களுக்கு ஒழுங்காகப் பிரசன்னமளிப்பதால்மாத்திரம் அந்தஇணைப்பு ஏற்படாது. பிரசன்னத்துடன் இன்னெரு அம்சமும் சேரவேண்டும். மரியாதையே அந்தஅம்சம். சேனைமுறையைச் சேர்ந்த சகலவிஷயங்களும் அங்கத்தினர்கள் கூட்டத்துக்குச்செலுத்தும் மரியாதையைப் பொறுத்திருக்கிறது. அந்தமரியாதை கீழ்ப்படிதலிலும், பிரமாணிக்கத்திலும், மதிப்பிலும் வெளிப்படும்.

2. பிரஸீடியக் கூட்டங்களுக்குப் பிரதிவாரமும் குறித்தநேரத்தில் ஒழுங்காகச் சமுகமாகுதல்:— மாதாந்த கூட்டங்களுக்குச் சமுகம் அளிப்பதை அங்கத்தினர்கள் தங்கள் பிரதமகடமையாகவும், பரிசுத்தமான கடமையாகவும் கருதவேண்டும். வேறு எந்தவிதமான சேவையும் அதற்குஈடு செய்யாது. கூட்டங்களுக்கு விஜயஞ் செய்யாவிடில் அவர்களுடையவேலை ஆத்துமமற்ற சரீரம்போலிருக்கும். இந்தப்பிரதமகடமையை அலட்சியஞ் செய்வதால் அலுவல்கள் சித்திபெறுவென்றும், வெகுசீக்கிரம் அங்கத்தினர்கள் சேனையைவிட்டு விலகிவிடுவார்களென்றும் புத்திக்குப் புலப்படுவதுடன் அனுபவமும் எச்சரிக்கிறது. களைத்துப்போய் இருக்கும்பொழுதும், காலநிலை வசதியற்றதாய்இருக்கும் பொழுதும், பொதுவாக வேறெங்காவதுபோகவேண்டியிருக்கும்பொழுதும் இந்தக்கடமையைச் செலுத்துவது அதிககஷ்டம். என்ருலும் கஷ்டமே ஒருவனது தகுதியை உரைத்துப் பார்க்கும். கஷ்டங்கள்அநுபவிக்க உடன்படுவோரே உண்மையானதகுதி உடையவர்கள்.

3. செபம்:—சேனையாளர் ஊழியஞ்செய்வதும்அல்லாமல் செபங்களும் செய்யவேண்டும். சங்கிலிச்செபத்தைச சொல்வதொன்றையே ஊழியஅங்கத்தினர்களுக்கு அனுதினக்கடமையாக விதித்திருந்தபோதிலும், தெசராவிலுள்ள சகலசெபங்களும் அவர்களின் அனுதின வேலைகளுடன் சேருவதைச் சேனைவெகுவாய் ஆசிக்கிறது. உதவிஅங்கத்தினர்களின்கடமை அந்தச் செபங்கள் அனைத்தையும்கொண்டிருக்கிறது. இவர்கள் சரீரப்பிரயாச ஊழியஞ்செய்யாதது உண்மையே. ஆயினும் ஊழியஞ்செய்து செபஞ்செய்யாதிருக்கும் ஊழியஅங்கத்தினரைவிட வெறும்செபஞ்செய்யும் உதவிஅங்கத்தினர் சேனைஇராணிக்குப் பெரிய சேவை புரிகின்றனர். சேனையானது ஊழியஅங்கத்தினர்களைத் தனதுஈட்டியின் முனையாகவும், உதவிஅங்கத்தினர்களை அந்தஈட்டியின் கைபிடியாகவும் கருதுகிறது.

ஊழியஅங்கத்தினர், உதவிஅங்கத்தினர்உட்படச் சகலரும் செபமாலை மாதாசபையில் சேரவேண்டும். அச்சபையில் அங்கத்துவம்பெறுவதால் கிடைக்கும்பலன்கள் அனந்தம்.

செபமாலைசொல்வதைப்போலச் சிறந்தது வேறென்றில்லை. இதைப்பற்றி நமதுபரிசுத்ததந்தை 10-ம்பத்திநாதர் சொன்னதை இங்கேகுறிப்பிடுகிறேன்.

செபங்களுள்ஐம்பத்துமூன்றுமணிச் செபமாலையைப்போலச் சிறந்ததும், வரப்பிரசாதவரம்நிறைந்ததும்வேறென்றில்லை. வேறெதையும்விட அதுதான் பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு அதிகம்பிரியமானது. ஆதலின் செபமாலையைச் சிநேகியுங்கள். பத்தியுடன் அதைத் தினந்தோறும் சொல்லுங்கள். என்னைமறவாதிருப்பதற்கு ஏதுவாக நான்உங்களுக்கு எழுதிக்கொடுக்கும்மரணசாசனம்இதுதான் என்பதே.

உங்கள்இருதயங்களிலே, உங்கள் குடும்பங்களிலே உங்கள்தேசத்திலே சமாதானத்தைக் கொண்டிருக்கவிரும்பினுல் ஒவ்வொருசாயங்காலமும் ஒன்றுகூடிச் செபமாலை ஓதுங்கள் என்று ஒன்பதாம் பத்திநாதர்என்னும் பாப்பாணவர் கூறியிருக்கிருர்.

(தொடரும்)

## தபசுகாலத்தின் முன்வரும் 2-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(லூக். 8: 4—15)

அக்காலத்தில் பட்டணங்களிலிருந்து திரளான சனங்கள் யேசுநாதரிடத்தில் தீவிரமாய்க் கூடிவரவே, அவர் உவமையாகத் திருவுளம்பற்றினதாவது: விதைக்கிறவனெருவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கிறபோது சில வழியோரத்தில் விழுந்து மிதிபட்டதுமன்றி ஆகாயத்தின்பட்சிகளும் அவற்றைப் பட்சித்தன. வேறுசில கற்பாறையின்மேல் விழுந்து முளைத்தபின், ஈரமில்லாமையாற் காய்ந்துபோயின. வேறு சில முட்கள்நடுவில் விழுந்தன; ஆனல் முட்களும் கூட எழும்பி அவற்றை அமுக்கிப்போட்டன. வேறுசில நன்னிலத்தில்விழுந்து முளைத்து நூறுமடங்காகப்பலனை அளித்தன என்றுசொல்லி: கேட்கச்செவியுள்ளவன் கேட்கக்கடவான் என்று சப்தமாய் உரைத்துக்கொண்டிருந்தார். அவருடைய சீஷர்களோ இவ்வுவமையின் கருத்து என்னவென்று அவரை வினவினர்கள். அவர் அவர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: சர்வேசுரனுடைய இராச்சியத்தின் பரம இரகசியத்தை அறிய உங்களுக்குஅருளப்பட்டிருக்கின்றது. மற்றவர்களுக்கோ கண்டுங் காணுதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி உவமைகளாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வுவமையின் பொருளாவது: விதை சர்வேசுரனுடைய வாக்கியம். வழியோரத்தில் விதைக்கப்பெற்றவர்கள் வாக்கியத்தைக் கேட்கிறவர்களேயாம். பின்பு பசாசு வந்து அவர்கள் விசுவசித்து இரட்சணியம் அடையாதபடிக்கு அவர்கள் இருதயத்தினின்று வாக்கியத்தைப் பறித்துக் கொள்ளுகின்றது. கற்பாறையின்மேல் விழுந்த விதையாற் குறிக்கப்பட்டவர்கள் வாக்கியத்தைக்கேட்டபோது அதைச் சந்தோஷத்தோடு அங்கீகரித்துக்கொள்ளுகிறவர்களேயாம். ஆனல், அவர்கள் வேரற்றவர்களாய்த் தற்காலத்துக்கு விசுவசித்து, சோதனைகாலத்தில் பின்வாங்குகிருர்கள். முட்கள் நடுவில் விழுந்த விதையாற் குறிக்கப்பட்டவர்கள் வாக்கியத்தைக் கேட்டவர்களேயாம்; பின்னும் அவர்கள் போய்க்கவலைகளாலும், ஐசுவரியங்களாலும் சீவியத்தின் இன்பங்களாலும் அமுக்கப்பட்டுப் பலன்கொடார்கள். நன்னிலத்தில் விழுந்த விதையாற்குறிக்கப்பட்டவர்கள் நல்லதும் உத்தமமுமான இருதயத்தில் வாக்கியத்தைக் கேட்டுக் காப்பாற்றிப் பொறுமையாற் பலன் கொடுக்கிறவர்களேயாம் என்ருர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

❀ இன்று உலகில் திரும்பவும் பிரித்தானியிடமே அதிகமான வியாபாரக்கப்பல்கள் இருக்கின்றன, சென்ற

## சுதேசவைத்திய சங்கம்

முல்லைத்தீவுப் பிரிவுச் சுதேசவைத்தியர்களின் கூட்டமொன்று சென்ற 28-ந் திகதி முல்லைத்தீவுப்பட்டினத்திலே நடைபெற்றது. அதில் கீழ்தேச வைத்தியசங்க தலைவர் டக்றர் சி. ஆ. அம்பலவாணர் எட்வின் நோயல் அவர்கள் தலைமைவகித்தனர். 24 வைத்தியர்கள் சமுகமளித்தனர். தலைவராலே கூட்டத்தின்நோக்கம், வைத்தியர்களின் கடமை, லைசென்ஸ் பெறவேண்டிய அவசியம், லைசென்ஸ் இல்லாதவர்களின் வைத்தியத்திற்குத் தடை, வைத்தியசோதனையின் விபரம், சங்கத்திஞல் அடையக்கூடிய நன்மை என்பன விளக்கிக்காட்டப்பட்டன. செட்டிகுளப்பகுதி வைத்தியசங்க உபதலைவர் திரு. பி. ஏ. தனபால என்னும் சிங்களவைத்தியரால் மூலிவகைகளின் காத்திரம், லைசென்ஸ் பெறுவதால் வைத்தியத்திற்குள்ள மதிப்புஎன்பன தமிழில் எடுத்துக்காட்டப்பட்டன. திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற வைத்தியர்களின்மகாநாட்டைப் பற்றி வெளியானவிபரங்களைப் படித்து விளக்கிக்காட்டினர். திரு. சி. ஹென்றி, திரு. மு. கதிரவேற்பிள்ளை என்பவர்கள் குறிப்புரைகூறினர். வைத்தியர்களின் சந்தேக வினுக்களுக்குத் தலைவர் பதில் அளித்தனர்.

இச்சங்கத்திற்கு உபதலைவராகத் திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்களும், காரியதரிசியாகத் திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். முல்லைத்தீவில் ஓர் வைத்தியகலாசாலை ஸ்தாபித்துத்தருமாறு அரசினரிடம் கேட்கவேண்டுமென்ற பிரேரணையுடன் வேறு பிரேரணைகளும் அரங்கேறின.

காரியதரிசிஎழுந்து, வைத்தியர்கள்ஐக்கியமாக ஒத்துழைக்கவேண்டியமுறை, ஒத்துழைப்பாலுண்டாகும் நன்மை, பொருமையை அகற்றி ஐக்கியத்தைக் கடைப்பிடித்து மேல்நாட்டு வைத்தியர்களின் நன்முன்மாதிரிகையைக் கண்டுபாவித்துக் கைகண்ட மூலிவகைகளையும், அவுடதங்களையும் பிரஸ்தாபப்படுத்துதல், வைத்தியர்களும் பொதுசனரும் இச்சங்கத்திஞல் அடையக கூடிய நலன்கள், சங்கம் விருத்திபெறச் செய்யவேண்டியன என்பனபற்றி விரிவாகப் பேசினர். ஈற்றில் சமுகமளித்த சகலருக்கும் நன்றித்துதிகூறப்பட்டது. அங்கத்தவர்களிற்பலர் தாரதரப் பத்திரம்பெறும் விண்ணப்பபத்திரங்களை நிரப்பிப் பணமுங் கட்டினர். இச்சங்கம் நிலைபெற்று நன்மைசெய்வதாக!

—நிருபர்

---

1949-ம்ஆண்டு ஆனி 30-ந்திகதியன்று அதனிடம் 2 கோடியே 16 லட்சம் தொன்கப்பல்கள் இருந்தன. அப்போது அமெரிக்கஐக்கிய தேசத்தினிடம் 1 கோடியே 80 லட்சம் தொன் கப்பல்களே இருந்தன. சென்றவருடம் 14 லட்சம் தொன் கப்பல்களைப் பிரித்தானி கட்டியுள்ளது.

❀ சீனதேச ஷாங்காய் நகரிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலையிலே சீனக்கம்யூனிஸ்தர்கள் ஒரேயொரு நவீன ஆசாரத்தை—அதாவது ருஷிய சமதர்ம மாக்ஸிய தத்துவத்திலே கட்டாயபாடத்தை விதித்திருப்பதாக வத்திக்கானிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. மற்றப்படி அந்தச் சர்வகலாசாலையிலே மாற்றம் எதுவும் செய்யப்படவில்லையாம்.

❀ நியூயோக் நகரிலே உலகின் மகா உன்னதமானதும், 102 மாடிகளைக்கொண்டதுமான எம்பயர் ஸ்ரேற் கட்டிடத்தின் உச்சியிலே 199 அடி உயரமான ரெலிவிஷன் எனப்படும் தூரக்காட்சிக் கோபுரம்ஒன்று அமைக்கப்படவிருப்பதாய் அந்நகரிலிருந்து சென்ற 24-ந் திகதி செய்தி கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவபாலனைக் கோவிலில் காணிக்கையாக நேர்ந்தகாதை

(சுவாமி வீரமாமுனிவர் இயற்றிய "தேம்பாவணியை" ஆதாரமாகக் கொண்டு சுருக்கிஎழுதப்பட்டது)

(முன்தொடர்ச்சி)

வாய்மையோர் புகும்கால் கோவில்
வணக்(கு)உரி பணியில் வைகும்
தூய்மையோர் எனஉள் கோட்டம்
துறந்தனர் அவையின் மூத்தோன்
மேய்மையோ(டு) உயர்ந்த வேதம்
மேற்படர் கொழுகொம்(பு) அன்னான்
சீய்மையோன் என்னும் வாய்ந்த
சீர்கெழு முனியும் வந்தான்

வாய்மை......மாட்சிமையுடையவர்களான இவர்கள் அங்கேபுகுந்தகாலையில் கோயில்அருச்சனைக்கு வேண்டியவற்றைச் சித்தஞ்செய்யும்பணியில் அமர்ந்திருக்கும் தூய்மையோராய் மனஅழுக்காற்றைப்போக்கிய முனிவர்களின் சபைக்கெல்லாம் மூத்தோனாய், கருத்தினால்உயர்ந்த வேதநூல் ஓர் கொடியாக மேலேபடரும்படிவைத்த கொழுகொம்பினையொத்தவனாய்ச் சீமையோன் என்னும் மாட்சிமைபொருந்திய முனிவனும் அங்கேவந்தார்.

உணங்கிய மரத்திற்(கு) ஆர்ந்த
உயிர்வரும் மாரி போன்றும்
இணங்கிய இருளைச் சீக்கும்
இரவியே போன்றும் நாதன்
பிணங்கிய வினைகள் தீர்ப்பப்
பிறந்(து)இவண் மனுவாய்க் காண
வணங்கிய முனிவன் நாளும்
வரந்தர வேண்டு வானே

காய்ந்துவாடிய மரத்துக்கு உயிராகவரும் மழையைப்போலும், கவிந்துமூடியஇருளைப் போக்கவரும் சூரியனைப்போலும் அவிழ்க்கப்படாது நம்மோடு பிணைந்துநெருங்கிய பாவவினைகளைத் தீர்க்குமாறு பரமநாதன்அவதரித்து, மனுவாக இங்கேபிறந்து, அவனைத்தான் கண்ணுற்காண வரந்தரவேண்டுமென்று நாள்தோறும் அவனைத் தொழுதுவணங்கிய முனிவன் இரந்துமன்றாடிவருவான்.

வம்(பு) அலர்ச் சுனையின் நீருள்
வலம்புரி பிறத்தல் போன்றும்
கொம்(பு) அலர்த் தருவின் உச்சி
குவளையே பூத்தல் போன்றும்
அம்(பு) அலர்க் கன்னி விள்ளா(து)
அளித்த(து) ஓர் மகவாய் நாதற்
கம்(பு)அலர் கண்கள் பூப்பக்
காண்பைஎன்(று) இறைவன் சொன்னான்.

(கடலிலே வலம்புரிபிறப்பதும், தடாகத்தில் குவளைமலர்வதுமே உலகில்இயற்கையாக, அவ்வியற்கை தவிர்ந்து) வாசனைகமழ்கின்ற மலரைப்பூக்கும் தடாகத்தின்நீரிலே வலம்புரிபிறந்ததுபோலும், கொம்புகள் மலரைப் பூக்கின்ற மரத்தின்உச்சியில் குவளையேபூத்ததுபோலும், (இயற்கைதவிர்ந்த அத்தன்மையாய் அற்புதமாகத்) தாமரைமலரையொத்த கன்னிமைமலராமலே கன்னிகையொருத்தி பிள்ளையாகப் பெற்றளித்த ஒப்பற்றபரமநாதனை நீ சாகுமுன்னமே கொம்பில்பூத்த மலரைப்போல் உன்கண்கள் மலர்ந்துஉவப்பக் காண்பாயென்று ஆண்டவனும் அம்முனிவனுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தான்.

நம்பிய இன்ன வாய்மை
நல்உயிர் ஆக நின்றான்
அம்பிய மலரின் சாயல்
அவதரித்(து) உதித்த நாதன்
கொம்பிய வினைகள் தீர்ப்பக்
கோயில்வந்(து) அடைந்தான் என்னப்
பம்பிய காட்சி தோன்றிப்
பறந்(து) என அன்று வந்தான்

ஆண்டவன் திருவுளம்பற்றிய இத்தன்மையானசொல்லை நம்பியவனாய் அதனைத்தனக்கு நல்லஉயிராகக்கொண்டு சாகாதுநெடுநாள் உயிரோடிருந்த சீமையோன் என்னும் அம்முனிவனும் மதுவைப்பொழியும் மலரின்சாயலாக அவதரித்து மனிதனாகப்பிறந்த பரமநாதன் நம்மைக் கோபித்துஉறுத்தும் பாவவினைகளைத்தீர்க்க இதோகோயிலிலே வந்தானென்று ஓர்உயர்ந்த காட்சியிற் கண்டறிந்து பட்சியையொத்துப் பறந்தாற்போலவிரைந்து அன்றுதானும் கோவிலுக்குவந்தான்.

விண்டன மலர்போல் விண்ட
விருப்பினன் வெய்(து) என்(று) எய்திக்
கண்டனன் கனிந்த கண்ணால்
கறவைகாண் கன்றின் வெஃகி
உண்டன உருவில் குன்றா
உயர்குணத்(து) இறைவன் தாளைக்
கொண்டன தலையில் சூடிக்
குணக்கடல் குளித்து நின்றான்

விரிந்தமலரைப்போல் மலர்ந்தஆசையுடையவனான சீமையோன் விரைந்து வந்து அவதரித்தநாதனைக் களிகூர்ந்த தன்கண்களால் கண்டான். கண்டதே கறவைப்பசுவைக்கண்ட கன்றினைப்போல் விரும்பிஓடிச்சென்று எடுத்த மனுக்கோலத்தில் குறைவுபடாமல்உயர்ந்த தேவசுபாவத்தின் மாட்சிமையைக் கொண்ட பரமநாதனின் திருப்பாதத்தைத் தன் தலைமேல்கொண்டு மாலையாகச்சூடிக் குணக்கடலாகிய அத்தேவகுழந்தையின் மாட்சியினுள் மூழ்கித் தாழ்ந்துவணங்கினான்.

அங்ஙனம்வணங்கிய சீமையோன் தான்அடைந்தஇன்பம் அடங்காது அழுதுசொரிந்தகண்ணீரால் திருக்குழந்தையின் பாதத்தைக் கழுவி, அருளாகிய பூம்புடவையால் துடைத்துத் தன்கண்ணாகியகையால் அக்குழந்தையினது முகத்தின்அழகெல்லாம் முகந்துஉட்கொண்டான். பின்னர் பூவுலகமாகியஉடலுக்கு ஓர்உயிராக அவதரித்துவந்தநாதனைத் தனது இருகரங்களாலும்ஏந்தி மார்போடுசேர்த்துத்தழுவி அடைந்தமகிழ்ச்சியால் பாடத்தொடங்கினான்.

பாற்கடல் என்உள்ளப் பதும மலர்அரும்ப
நூற்கடலே ஈங்(கு) உதித்தாய், நும்மலர்க்கண் முத்(து)அரும்ப
நும்மலர்க்கண் முத(்து)அரும்ப நோய்செய் வினைசெய்தேம்
எம்மலர்க்கண் முத்(து)அரும்ப இன்று வினைதீர்த்தாய்

பாற்கடலிலே மலர்ந்ததாமரைபோல என்உள்ளம் இனிதே மலரும்படியாக வேதநூல்முதலிய நூல்எல்லாம் அடங்கக்கொண்ட கடலாகியநீ உனது கண்மலரானது முத்தாகிய கண்ணீரைப்பொழியத் துன்பம்அடைதற்கென்று இங்கே மனுவாகத்தோன்றினையே. உனது கண்மலரானது முத்தாகிய கண்ணீரைச்சொரிந்து அழும்படியாக உனக்குத்துன்பம் உண்டுபண்ணும் பாவவினையை நாமெல்லாரும் செய்தோம். ஆனால் இன்றோ நாம் இன்பமிகுதியால் எமது கண்மலரானது கண்ணீர்சொரியும்படியாக நம்முடையவினையெல்லாம் நீயேதீர்த்தாய் என்றான்.

வினைதீர்ப்ப எய்தி வினைகொண்டாய் பாவப்
புனைதீர்ப்ப ஈங்குமனுப் பூட்சிச் சிறைகொண்டாய்
பூட்சிச் சிறைகொண்ட புல்என் உயிர்போய்உன்
காட்சிச் சிறைகொண்டு கண்டேன் கதிநிலையே

என்பாவவினையைத் தீர்க்கும்படியாகவந்து நீ துன்பங்களைக் கொண்டாயே. பாவமானது எனக்குஇட்ட விலங்குகளை அறுத்து என்னைமீட்கும்படியாக நீ மனுஉடலைச் சிறையாகக்கொண்டாயே. இந்தத்தயையை நான் ஆராய்ந்து அடைந்தஇன்பமிகுதியால் உடலைச்சிறையாகக்கொண்ட என்புல்(என)லுயிரும் தனது சிறையைவிட்டு உன்னைக்கண்ட காட்சியையே சிறகாகக்கொண்டுபோய்ப் பரகதியின்நிலையைக் கண்டேன்.

கண்டேன் கதிநிலையே கண்(டு) உயிர்என் பூம்பல்இனி
உண்டேன் உயிராய் அன்(பு) உன்னடியைச் சூடினேன்
உன்னடியைச் சூடி உனை அணுகான் தன்வினையே
தன்னடியைச் சூழ்ந்(து)உதைப்பச் சுட்டெரிவீழ்ந்(து) ஆழ்வானே

உன்னைக்கண்டு பரகதியின் நிலைமையேகண்டேன். அவ்வாறுகண்டபின் என்உயிரை இனிஏன் வைத்துக்கொண்டிருப்பேன்? உன்திருப்பாதத்தைத் தலைஅணியாகச்சூடி உனதுஅன்பினை உயிராகஉட்கொண்டேனே. இந்த விதமாக உன்திருப்பாதத்தைச்சூடி உன்னை அண்டிவாராதவன் தன்வினையே தன்அடியைவிடாது சூழ்ந்துபிடித்து அவனை உதைத்துத் தள்ளுதலினால் அவன் சுடுகின்றஎரிநரகில் விழுந்துஅமிழ்ந்துவானே.

## மாதகல்துறை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாசம் 2-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 12-ந் திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.

11-ந் திகதி சாயந்தரம் 7 மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பர வைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீப அலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படும். மறுநாட்காலை மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

[யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.]

கட்டளைக்குரு, மாதகல்.

## மோஹெஞ்சொ—தாரோ ஆராய்ச்சி

மோஹெஞ்சொ — தாரோ என்பது வட இந்தியாவிலே சிந்துநதிக் கரையிலுள்ள ஓர் பிரதேசமாகும். இங்கிருந்த ஒரு விஸ்தாரமான மேட்டைத் தோண்டி ஆராய்ச்சிகள் நடத்திய போது, சுமார் 2500 வருடங்களுக்கு முன் இருந்த ஓர் புராதனநகரம் தென்படலாயிற்று. அதில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறுபொருட்களைக்கொண்டு அந்த நகரில் வசித்திருந்தவர்கள் திராவிடப் பண்பை உடையவர்களென்றும், அக்காலத்திலேயே உயர்ந்த நாகரீக மேம்பாட்டுடன் வாழ்ந்துவந்தவர்கள் என்றும் அறியப்படலாயிற்று. இந்த மோஹெஞ்சொ — தாரோ இப்போது மேற்குப்பாகிஸ்தானில்அடங்கியுள்ளது. புதைபொருள்ஆராய்ச்சியாளர் தங்கள் ஆராய்ச்சிவேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கென்று "பிறிட்டிஷ் அக்கடெமி" என்ற கல்விமான்களின் கழகம் 5,500 ரூபா பாகிஸ்தான் அரசினருக்கு உபகரித்திருக்கின்றது.

## அத்திலாந்திக்உடன்படிக்கை

அத்திலாந்திக் உடன்படிக்கையில் சேர்ந்துகொண்ட ஏழு நாடுகளுக்கும் கப்பலில் ஏற்றி அனுப்பும்படியாய் 100 கோடி டலர் பெறுமதியான பீரங்கிகள், தாங்கிகள், யுத்த ஆயுதங்கள், குண்டுகள்ஆதியன அமெரிக்க ஐக்கிய தேச துறைமுகங்களைநோக்கிச் செல்லத்தொடங்கியிருக்கின்றன. பிரசாதிபதி ட்றூமன்அவர்கள் இரகசியமான சிறந்த பாதுகாப்புத் திட்டமொன்றை அங்கீகரித்ததையும், ஏழு ஐரோப்பிய நாடுகளும், அ. ஐ. தேசமும் பொருத்தனைக்குக் கையொப்பம் இட்டதையும் தொடர்ந்து தீவிரமாக நடைமுறைக்கு இதுவரலாயிற்று. யுத்ததளபாடங்களை ஏற்றும் கப்பல்கள் பங்குனிமாதம் 1-ந் திகதி அங்கிருந்தும் சென்றுகொண்டிருக்கும். பிரித்தானி, பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்து, லக்ஷெம்பேர்க், நோர்வே, தென்மார்க் ஆதிய ஏழுநாடுகளுக்கும் அனுப்பப்படும். போரெத்தனங்களின் தொகை அந்தரங்கமாகவே இருந்துவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் 1950.

| | | |
|---|---|---|
| வெ | 10 | அர்ச். ஸ்கொலாஸ்திக்கம்மாள், க. |
| சனி | 11 | லூர்துபதியில் தெரிசனமான தேவதாயார். |
| ஞா | 12 | தபசுகாலத்தின்முன்வரும் 2-ம் ஞாயிறு (செக்ஸாகேசிமா ஞாயிறு) — அர்ச். எவுலாலியம்மாள், க. வே. |
| திங் | 13 | அர்ச். மர்த்தினியார், மு. |
| செவ் | 14 | அர்ச். வலந்தினுர், கு. வே. |
| புத | 15 | அர்ச். பவுஸ்தீனுர், வே. |
| வியா | 16 | அர்ச். சுலியானம்மாள், க. வே. |

# சத்தியவேத பாதுகாவலன்

1950-ம் ஆண்டு

மாசி மாசம் 9-ந் திகதி

## ஆயுதப் பந்தயம்

யப்பானிலே பயங்கரஉயிர்ச்சேதத்தையும், பொருட்சேதத்தையும்விளைத்து அகில முழுவதையும் அப்போது திகிலுற வைத்த அணுக்குண்டின் காலம் மலையேறிவிட்டது. இதனைக் காட்டிலும் ஆயிரமடங்கு நாசகரமானதும், மாபெரும் சர்வபரிநாசத்தை உண்டுபண்ணக்கூடியதும், உலகின் மகாப்பெரிய போராயுதமுமாகிய சலவாயுக்குண்டின்காலம் இப்போது தலையெடுத்துள்ளது. கடைசியாகஇதனைச் செய்யத்தொடங்குமாறு அமெரிக்க ட்றூமன் பிரசாதிபதி ஆஞ்ஞாபித்துவிட்டனர். "ஆக்கிரமிக்கக்கூடிய எவரையும் வீரத்துவமாகஎதிர்த்துநின்று நமதுதேசம் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள வல்லதாய் இருக்கிறதோ என்பதை நாம் பார்க்கத்தான் வேண்டும்" என்று அவ்வேளை அவர் கூறலாயினர். இந்தநவமான இராட்சத சலவாயுக்குண்டைச்செய்யப் பத்துக்கோடி முதல் நாலூறுகோடிடலர் வரையிலே செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. இதில் ஒரு குண்டை எங்காவது விசுமிடத்து, அது நூறுசதுரமைலுக்கு மேற்பட்ட பெரும்விஸ்தாரமான ஓர்பகுதியை அந்தப்படியே சர்வபரிநாசஞ்செய்து இருந்தவிடமுந் தெரியாமலே பண்ணிவிடத்தக்க அத்தனை பெரும் நாசகரமானது.

உலகசமாதானத்தின்மட்டிலே பெரிதும்கரிசனை கொண்டுள்ளவரான அமெரிக்க பிரசாதிபதி இந்தக்கொடிய அணுக்குண்டைச்செய்யுமாறு ஆஞ்ஞாபிக்கவேண்டிய காரணம்என்ன? சர்வதேச்அணுச்சக்திக் கட்டுப்பாட்டுக்குத் திருப்திகரமான ஓர்திட்டம் ஏற்படுகிறவரையிலே அணுச்சக்திப் போராயுதங்கள் தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென்று அவர் கட்டளை பிறப்பித்ததிலிருந்து அக்காரணத்தை யூகித்துக்கொள்ளலாம் "தற்போதைய நிலைமையில் தம்மாற்கூடிய ஒரேயொருவழியையே அவர் மேற்கொண்டிருக்கிறூர்; நாம் ஆசிப்பதெல்லாம் தகுந்தபரிசோதனையுடன் அணுச்சக்தியைக் கட்டுப்படுத்துவதே; அப்போது சலவாயுக்குண்டைச் செய்யவேண்டியஅவசியம்ஏற்படாது" என்று அமெரிக்க செனற்சபையின் யுத்தசேவைநிர்வாக தலைவர் கூறுகின்றூர். "சலவாயுக்குண்டைச் செய்யும்வேலையிலே தீவிரகெதி அவசியமென்று நான் பிரசாதிபதிக்குச் சிபாரிசுபண்ணியிருக்கிறேன்; போராயுதங்கள் செய்வதிலே நடைபெறும் பந்தையங்கள்பற்றியும், உலக சமாதானத்துக்காக அவைகள் எவ்விதம் நிறுத்தப்படமுடியும் என்பதுபற்றியும் நாம் ஓர் பகிரங்கவிவாதம் நடத்த வேண்டுமென நம்புகிறேன்" என்று அமெரிக்கஅணுச்சக்தி நிர்வாகசபைத் தலைவர் கூறுகின்றூர்.

சமதர்மப்போர்வையிலே மறைந்து மண்ணாசைகொண்டதாய் நாடுகளை ஒன்றென்றூய் அடிமைப்படுத்திவருகின்ற சோவியற்ரூஷியா அணுச்சக்தியைச் சர்வதேசகட்டுப்பாட்டின்கீழ் தகுந்தவாறுகொண்டுவரப் பெருந்தடையாய் இருந்துவருகின்றது. இன்று அதன் சமதர்மசண்டமாருதம் பரவாது தடுத்து அதற்குப்பெரும் முட்டுக்கட்டையாய்இருப்பது அமெரிக்க ஐக்கியதேசமே. அதனுல் சோவியற்அரசும் அமெரிக்கவரசும் ஒன்றையொன்று மேற்கொள்ளவிடாதுபோரிகட்டிநிற்கின்றன. அதனுல்போராயுதங்கள் பந்தையத்திலே மிகுந்த உக்கிரவேகத்துடன் செய்யப்படுகின்றன. ஒருபால் அமெரிக்கவரசு சலவாயுக்குண்டைச் செய்யத்தொடங்க, மறுபால் இந்தச்சலவாயுக்குண்டைக்காட்டிலும் சிறந்ததோர் புதியவெடிகுண்டை ரூஷியா கண்டுபிடித்திருக்கிறதென்று மற்றோர்அதிர்வெடி கிழம்பியிருக்கிறது. இந்தவேளை வத்திக்கான் தினவர்த்தமானி எழுதியுள்ள குறிப்புரை ஊன்றிக்கவனிக்கத்தக்கது. "உலகம் இன்று மனுத்தன்மையில்லாத பெருங்குழப்பமான நீர்ச்சுழி ஒன்றினுள் மிகவேகமாக உறிஞ்சி இழுக்கப்படுகின்றது. சமாதானத்துக்கென்று தங்களை மிகவாக அர்ப்பணஞ்செய்துள்ள மக்களில்ஒருபாலார் அத்துணைபெரும் நாசகரமான ஆயுதத்தைச்செய்வதில் தலையிடுவார்களானுல்—அதனைச்செய்வதால் ஏற்படக்கூடிய கணிக்கமுடியாத பெருஞ்செலவுகளையும், அதனைப்பிரயோகிப்பதால் ஏற்படக்கூடிய பயங்கரவிளைவுகளையும் பறுவாய்பண்ணுமற் செய்யத் தலைப்படுவார்களானுல்—நல்லெண்ணமும், சமாதானமும் இனிமேல் யுத்தத்தைத்தளர்த்தி ஒழித்துவிட முடியுமென்ற நம்பிக்கை இல்லாமற்போகிறதென்றல்ல, ஆனுல் தடுக்கமுடியாதவகையிலே உலகம்பகிரங்க யுத்தத்தில் நழுவிவிழுகின்றதென்றே கருதவேண்டும்" என்பதே.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கோடியற்புதரான அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்ட மன்றூட்டில் சித்தி அடைந்தேன். நேர்த்திப்படி பத்திரிகையில் பிரசுரிக்கிறேன். அவரின் நாமம் எங்கும் புகழப்படுவதாக. [illegible]

நாரந்தனை [illegible]

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

பங்குனிமாசத்தைப்போன்று பகலிலே வெயில் எறிக்கின்றது. மழைத்துளிகள் திரண்டு விழுவதுபோன்று இரவிலே பனி பெய்துவருகின்றது. பனிக்கும் வெயிலுக்குமேற்ற கினிகள் காணப்படுகின்றன.

### பரிசுத்தவருடமும் மாசிமாதமும்

ரோமாபுரியிலே இம்மாசம் 10-ந் திகதி பதினொரும் பத்திநாதபாப்பானவர் பரமபதம்அடைந்த வருடாந்த தினம் ஞாபகப்படுத்தப்படும். கத்தோலிக்கதிருச்சபைக்கும், இத்தாலிய அரசுக்குமிடையே திரும்பவும் சமாதானம் உண்டுபண்ணிவைத்து வத்திக்கான் இராச்சிபத்தை வகுத்துவிட்ட லத்தறன் உடன்படிக்கை நடந்தேறிய 21-ம் ஆண்டு நிறைவு இம்மாசம் 11-ந் திகதியாகும். இத்தாலியிலே இதுஒரு விடுமுறைநாளாகும். 22-ந் திகதி விபூதித்திருநாள், அவென்ரின் குன்றின் மீதுள்ள சந்தாசபினுவின் ஐந்தாம் நூற்றூண்டுக் கோவிலிலே தபசுகாலத்தைக் குறிப்பதற்காக விசேஷ திருச்சடங்குகள் நடந்தேறும்.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

நாம் முன்னர் அறிவித்திருந்தபடி யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்ற 6-ந் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நகரமண்டபத்தில் ஆரம்பமாயிற்று. சங். டயஸ் நீதியரசர்வந்து விசாரணை நடத்துகின்றூர். திரு. வி. தாமோதரம்அவர்கள் முடிக்குரிய நியாயவாதியாக வழக்குகளை நடத்துகின்றூர். இம்முறைச் சுப்பிறீங்கோட்டிலே 15 கொலைவழக்குகள் உட்பட 24 வழக்குகள் விசாரணைக்கிருக்கின்றன.

### மாதன் கவிதைப்போட்டி

இலங்கை சுதந்திரமடைந்த முதலாவது ஆண்டு நிறைவுவிழாவின்போது நடைபெற்ற மாதன் அஞ்சலோட்ட கவிதைப்போட்டியிலே இரண்டாவது பரிசில்பெற்றவரும், வதிரி திருஇருதய கலாசாலைத் தலைமை ஆசிரியருமான திரு. கே. ரி. ஞானப்பிரகாசம்அவர்களுக்கு இரண்டாவது பரிசில்தொகையான 500 ரூபாவையும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியான திரு. அல்பிறெட்தம்பிஐயாஅவர்கள் அளிக்க முன்வந்துள்ளாரென அறிகின்றோம்.

### பதிற் பிரதம வித்தியாதிபதி

பதிற்பிரதம வித்தியாதிபதியாகவிருந்த திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையின் கல்விப்பிரிவுக்கு போதனு ஆசிரியராக நியமனஞ்செய்யப பெற்றிருக்கின்றூர். முன்னர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவராயிருந்த திரு. கே. நேசையா அவர்களும் அதேகல்விப்பிரிவில் ஓர்போதனுசிரியராக நியமனம்பெற்றுள்ளார். இந்தக்கல்விப்பிரிவின் தலைவராயிருப்பவர் பேராசிரியர் கிறீன் அவர்களே.

### முதல் இலங்கைக்கோம்மிஷனர்

மலாயாவிலும், சிங்கப்பூரிலும் இலங்கையின் முதலாவது ஹைகொம்மிஷனராக நியமனம்பெற்ற திரு. எம். சரவணமுத்துஅவர்கள் சென்றவாரம் சிங்கப்பூர்—மலாய அரசினரிடம் தமது நியமன அதிகாரப் பத்திரங்களைச் சமர்ப்பித்துப் பதவியை ஏற்றிருக்கின்றூர். சிங்கப்பூரிலும், மலாயாவிலும் சுமார் முப்பதினுயிரம் இலங்கையர் வசிப்பதாக மதிப்பிடப்படுகிறது.

### யப்பானிய சாமான்கள்

யப்பானிலிருந்து புடவைகள், சீமெந்து, சாதிக்காய்ப்பெட்டிகள், குடைகள், சமையலறைசாமான்கள் ஆதியவற்றை இறக்குமதிசெய்ய வியாபாரிகளுக்குத் தற்போது லைசென்சுகள் அரசினராலே வழங்கப்படுகின்றன. [illegible] கோடியே 60 லட்சம் [illegible] பெறுமதியான சாமான்களையே

## அறிவித்தல்

யாழ்ப்பாண முதற் தேவநற்கருணை ஆதாயநிதிச்சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 19-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை (19-2-50) சாயந்தரம் சற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென்சாள்ஸ் பாடசாலையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அபிமானிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

காரியதரிசி.

31, ஆசனக்கோவில்
வடக்குவீதி,
யாழ்ப்பாணம்.
1-2-50.

இறக்குமதிசெய்ய லைசென்சுகள் வழங்கப்படுமெனத் தெரியவருகிறது. யப்பானிலிருந்து தருவிக்கப்படும் புடவைகளில் பெரும்பாகத்தைக் கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனம் எடுத்துக்கொள்ளும்.

### வெண்காயம் மிளகாய்விலை

தற்போதுகொழும்பிலே ஒருறூத்தல் ஈரவெங்காயம் 25 சதமாகவும், ஒருறூத்தல்செத்தல்மிளகாய் 1 ரூபா 60 சதமாகவும் விலைப்படுகின்றன. ஆனுல் விரைவிலே இவற்றின்விலை இறங்குமெனக் காத்திருக்கலாம். 1950-ம் ஆண்டுக்கெனச் சமீபத்திலே இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 5,000 தொன் செத்தல்மிளகாய் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வரத்தொடங்குமிடத்து மிளகாயின்விலை இறங்கவேண்டிவரும். அதிகம்சமீபத்திலே இந்தியஅரசாங்கம் இலங்கைக்கு 20,000 தொன் ஈரவெங்காயமும்உதவவிருக்கிறது. இதுவும் வரத்தொடங்குமிடத்து ஈரவெங்காயத்தின்விலையும் ஏறக்குறைய 22 சதமாக இறங்கும்.

### சுத்தமான மண்ணெண்ணெய்

அஞ்செலா மேர்ஸிஎன்ற ஒன்றரை வயசுப்பிள்ளை மண்ணெண்ணெய் குடித்துச் சென்றவெள்ளிக்கிழமை கொழும்புப் பெரியஆஸ்பத்திரியில் இறந்துபோய்விட்டது. பிரேதவிசாரணை நடத்திய கொழும்புநகரின் கொறனரான திரு. ஜே. என். சி.திருச்செல்வம்அவர்கள் அவ்வேளை கூறிய ஆலோசனையில்: சனங்களுக்குச்சுத்தமான மண்ணெண்ணெய்கொடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தற்போதுகொடுபட்டுவரும் மண்ணெண்ணெயானது அதனைநச்சுத்தன்மை உடையதாக்கும் அசுத்தங்களைக் கொண்டிருக்கிறதென்றும், இதனைக்குடித்து அநேகபிள்ளைகள் இறந்துபோய்விட்டனவென்றும், சுத்தமானஎண்ணெய் கொடுபடுமானுல் இந்தமரணங்கள் நேர்ந்திருக்கமாட்டாவென்றும் அவர்கூறலாயினர்.


### எதிரி விடுதலைபெறுவாரா?

கொழும்புச் சுப்பிறீங்கோட்டிலே பிரஸ்தாபமாக விசாரணைசெய்யப்பட்டுவரும் குதிரைப்பந்தைய கொலை-கொள்ளை வழக்கிலே நான்காம் எதிரியான ஜயசிங்கஎன்பவன் விடுதலைசெய்யப்படுவான்போல் இருக்கிறது. இதற்குக்காரணம் போதியசாட்சி இல்லாதிருப்பதேயாகும். போதியசாட்சி இல்லாதிருக்குமிடத்து எந்தஒருஎதிரியிலும் பாரிக்கப்பட்டிருக்கும் எந்தக் குற்றச்சாட்டையும் அல்லது குற்றச்சாட்டுகள்முழுவதையுமே விசாரணையின் போது இடையிலேநீக்கிவிடச் சட்டம் அனுமதிக்கின்றது.

### மட்டக்களப்புச்சுப்பிறீங்கோடு

ஆண்டிலே முதலாம்முறையாகநடந்தேறும் மட்டக்களப்புச் சுப்பிறீங்கோடு இந்தமாசிமாதம் 13-ந்திகதி ஆரம்பமாகும். சங். ஆர். வின்ஹாம் நீதியரசர்சென்று விசாரணை நடத்தவிருக்கின்றூர். இம்முறைஅதிலே ஒன்பதுகொலைவழக்குகளும்,கொலைசெய்ய எத்தனித்த வழக்கு ஒன்றும் விசாரணைக்கிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண. ச. குருசோவிறதர்அவர்கள்
பரமபதம்அடைந்த

## இரண்டாம்வருட ஞாபகம்

மருந்தெனவே இருந்தனையே
அருந்தவத்தோய்!
வறியவர்க்கோர் பெருநிதியே
மாட்சிமிக்கோய்!

பிரிந்தனையே மறைந்தனையே
பிரியசெல்வப்
பிள்ளைகள்நாம் என்றினியோ
காண்போம்அந்தோ!

கரிந்துஉளம் வருந்துகுதே
கருதுந்தோறும்
கண்களில்நீர் பெருகுகுதே
குருசோ என்னும்

பெருந்தகையேபெற்றவள்போல்
பிரியதாயே!
பிரிந்தெமையே இருஅயனம்
கடந்ததன்றோ!

திங்களென முகமலர்ந்து
சேமங்கேட்பாய்
தெருவினிலே தவமுனிபோல
நடந்துசெல்வாய்

தங்கமென எந்திருவாய்ச்
சகத்திருந்தாய்
தனையர்களை ஆய்ந்தெடுத்து
நெறியிற் காத்தாய்

சங்கைதரு சபைகள்பல
ஆக்கிவைத்தாய்
சகலமுமே வளமுறவே
தழையச் செய்தாய்

இங்கிருந்த எங்குருசோ
விறதர்வேந்தே [யே
எங்கொளித்துக் கொண்டனை
இயம்புவாயே!

## பிரியதத்த வங்கி

பிரியதத்தம்

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 23,39,095 |
| கடந்தவாரம் சொல்லியது | 51,041 |
| மொத்தம் | 23,90,136 |

சேபமாலை

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 1,82,053 |
| கடந்தவாரஞ்சொல்லியது | 2,538 |
| மொத்தம் | 1,84,591 |

## நன்றித்துதி

திருஇருதய இராசாவின் இரக்கத்தி னலும், பரிசுத்த பத்திமா மாதா, கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாரின்மன் றாட்டாலும், திருக்குடும்பசபை ஸ்தாபக ரான பீற்றர் கோபோத் என்பவரின் சலுகையாலும் எனது மகனுக்கு வந்த கடுமையான வருத்தம் படிப்படியாய் சுக மடைந்துவருகிறது. முற்றிலும் குண மடைய இன்னும் அவர்களின் சலுகையை இரந்து நேர்த்திப்படி பிரசுரம்பண்ணு கிறேன்.

மாதகல் தோ. அ.

## துண்டு துணுக்கு

—அம்பலாங்கொடைப்பட்டின (ஏர்பண்) சங்கத்தின் புதிய உபதலைவராகத் தெரியப்பட்டிருக்கும் திரு. மைக்மிலன் டி சில்வா என்பவருக்குச் சென்ற புதன்கிழமை அங்கே கார்கள்தங்கும் பகிரங்கநிலையத்தில் அப்பட்டினத்தி லுள்ள கார்சாரதிகள் ஓர்வரவேற்பு உப சாரணைவிழாநடத்தினார்கள். இவர் முன் னே ஓர்கார்சாரதியாக இருந்தமையே அவர்கள்நடத்திய உபசாரணைவிழாவிற் குக் காரணமாகும்.

* *

—கண்டிநகரிலுள்ள—அதாவது கண்டிநகரசங்க எல்லைக்குள் அடங்கி யுள்ள தவறணைகளை நீக்கிவிடுதற்கென்று பொதுசனவாக்குக் கேட்கப்படவிருக் கிறது. அங்கே இதுவிஷயமாய்ச் சம் மதிச்சீட்டுப் போடவேண்டியவர்களாய் 12,089 ஆடவர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் 7,253 பேர் அதாவது நூற்றுக்கு 60 வீதமானோர் சீட்டுப் போட்டால்தான் தவறணைகள் நீக்கப் படும்.

* * *

—கொழும்பிலே றப்பரின் விலை இந்தவாரமும் மேலும்அதிகரித்திருக் கிறது. இதற்கானகாரணங்களில்ஒன்று மலாயாவிலிருந்து ருஷியா மாதம்ஒன் றுக்குச் சுமார் பதினாயிரம்தொன் றப்பர் வாங்கத் தொடங்கியிருப்பதே. இங்கிலாந்திலும், மற்றும்ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள றப்பர்க் கைத்தொழி லாளர்களுக்கும் அதிகமான றப்பர் தேவைப்படுவது மற்றொன்றாகும்.

* * *

—கொழும்புநகரப் புதியமேயரான டக்றர் குமாரன் ரத்தினம்அவர்கள் அந் நகரின் முதலாவது இடதுசாரி மேய ரெனத் தம்மைப்பாராட்டிக்கொள்ளு கின்றார். இதுவிஷயமாய் இடதுசாரி என்பதையும், இடதுகட்சிஎன்பதையும் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டியது. புதியமேயர் இடதுசாரிகளைச் சேர்ந்த பேர்திலும் இலங்கையிலுள்ள மாக்ஸிய சமதர்மக்கட்சிகள் மூன்றினுள் எதை யுமே சேர்ந்தவால்ல.

* * *

—"1950-ம்ஆண்டு மாசிமாசம் 8-ந் திகதி இந்தியா அல்லது ஐரோப்பாவில் ஓர்யுத்தம் உண்டாகுமென்று வியாங் கொடையிலுள்ள சோதிடர்ஒருவர் சிலகாலத்தின்முன் கொழும்பிலே பிர சுரமாகும் ஆங்கில தினவர்த்தமானி ஒன்றில் சோதிடம்ஒன்று வெளியிட் டிருந்தார். இன்று 9-ந்திகதியும் ஆகி விட்டது. யுத்தம்என்றசொல்லே இல்லை. எலிசபேத்இளவரசிக்கு ஓர் ஆண்குழந்தைபிறக்குமென்று இவர் அப்போது ஓர் சோதிடம் சொல்லி யிருந்தாராம். ஆனால், இப்போது இவர்சொன்னசோதிடம்......

* * *

—கொழும்பிலே பழையவெள்ளைக் குதிரைஎன்றகட்டிடத்தில்இருந்துவரு கின்ற "சோதிடப் பெருங்கழக"த்தின் தலைவர் ஸ்ரீமகாஎன்பவர். இவர் பிரித் தானிய பொதுத்தேர்தலிலே தொழிற் கட்சிக்கே வெற்றிகிடைக்குமென்றும், புதியபாராளுமன்றத்தில் திரு. வின்ஸ் ரன் சேர்ச்சில்அவர்களின் கட்சிக்கும் அதிகமானபலம் இருக்குமென்றும் சோதிடம்எழுதி அனுப்பியிருக்கின் றார். அத்துடன் வ..கிறபங்குனி மாதம் 13-ந்திகதிக்குப்பின் பிரித்தா னிக்கு நல்லகாலம்பிறந்து இரண்டு வருடம் நீடித்திருக்குமென்றும்சோதி டம் கூறியிருக்கின்றார். எப்படியிருக் கிறது சோதிடம்?

* * *

—இந்தியமாஜி மகாதேசாதிபதி யாகிய இராஜகோபாலாச்சாரிஅவர்கள் ஜால்னா, அவுரங்கபாத் நகரசபைகள் தமக்குஅளித்த வரவேற்பில்பேசிய போது: "சோதிடத்தில் எனக்கு நம் பிக்கையேஇல்லை; தனதுகடமையை ஆற்ற[illegible] விவேகமுள்ளவ னையும், தூரதிருஷ்டியுடையவனையும் இருக்கவேண்டும்; கிரகங்களைநம்பினால் மனவேதனையும் வருத்தமுமே விளை யும்" எனக் கூறியிருக்கின்றார்.

* * *

—ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து, ஆட்டம், சிங்கம்என்றுசொல்லி எம்தமிழ்நாட்டில்விளையாடும் கிட்டி விளையாட்டை ஆராய்ந்து பரிசீலனை செய்த தமிழ்அறிஞரும், சரித்திர ஆராய்ச்சிவல்லுனருமான பெரியார் ஒருவர் சிங்கக்கொடி தமிழருடைய தென்று பட்டவர்த்தனமாய்ச் சொன் னதாக நண்பர்ஒருவர் தெரிவிக்கின்றார். இதனை விளக்க ஒருவர் முன்வர மாட்டாரா?

* * *

—"சிறுபான்மைக் கட்சியினராகிய தமிழர் இவ்விஷயத்தில் (தேசியக் கொடி) கூர்ந்தமதியுடன் ஒத்துழைக் கும்கருத்து இருந்திருப்பின், சிங்கக் கொடி எங்கள்சூரபத்மனுடைய கொடி தானேஎன்று சொல்லிக்கொண்டு முன் னணியில் சிங்கக்கொடியுடன் நின் றிருக்கவேண்டும்" என்று 5-2-50-இல் வெளியான "ஈழகேசரி"யிலே அதன் கொழும்புநிருபர் வரைந்திருப்பதும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

—"ஆனந்தா"

# "அவர்கள் மூன்று சிறுவர்கள்"

## பத்திமா பதியில் தேவதாயார் அளித்த காட்சிகளின் விளக்கமான வரலாறுகள்

அதிவண. C. பாத்தாஸ் சுவாமி அவர்கள் பிராஞ்சியபாஷையில் பத்திமாவைப்பற்றி எழுதிய கவர்ச்சிக்குரிய ஓர் அருமையான நூல்

வண. சூ. ஆசீர்வாதம் சுவாமி அவர்களால் தமிழில் இசைத்து எழுதப்பட்டது.

உலகத்துக்கு ஓர்முக்கியமான சம்பவத்தை அறிவிக்கும்படியாகத் தேவதாயார் தெரிந்து காட்சிஅருளிய இயாசிந்தா, பிரான்சீஸ், லூசியாஎனும் மூன்று சிறிய இடைப்பிள்ளைகளின் சரிதையை இதுஅடக்கியது. 333 பக்கங்கள் அடங்கியது. தமிழிலே முதன்முதலாக அழகியபுத்தகரூபமாய் வெளிவந்திருக்கிறது. பத்திமாபதிச்சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், காட்சிகளின் முழுஅர்த்தங்களையும் சரிவர அறிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படத்தக்கது.

மூன்று வேறுபட்ட முகம், அதுபோல மூன்று வேறுபட்ட ........ அந்த அலங்காரமான அதிசயம் என்ன? வானத்தின் அற்புதஅடையாளம்என்ன? காட்சிநாயகியின் பெயர் என்ன? அந்த அவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்த செய்திஎன்ன? அந்த இரு பூலோக சம்மனசுகளின்........ இந்த மூன்று சிறுவர்களும் யாருக்கு? விசேஷமாக எவருக்கு? எவற்றில்? முன்மாதிரிகையாய் இருக்கின்றார்கள். எவருக்குவேண்டிய உதாரணங்கள், எவருக்கு ஏற்றவாசகங்கள், எவருக்குஏற்ற சிறந்தபுத்திமதிகள் இதில்அடங்கியிருக்கின்றன? காட்சிபெற்ற சிறுவர்கள் சொல்லிவந்த செபங்கள்எவை? இயாசிந்தா மரிக்கச் சிலநாட்களின்முன் கூறியவைகள் எவை? இந்த வினக்களுக்கெல்லாம் இதிலேதகுந்த விடைகளைச் சரிவரக் கண்டுகொள்ளலாம். பத்திமாநாயகியின் கீர்த்தனங்களும், இடையிடையே காட்சிகளுடன் சம்பந்தப்பட்ட அநேக சித்திரப்படங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

ஒவ்வோர்கத்தோலிக்க இல்லமும் ஒவ்வோர் பத்தி மாபதியாக விளங்கவேண்டுமானால், பத்திமாநாயகியின்பத்தி தமிழ்நாடெங்கும் பரக்கவேண்டுமானால், கத்தோலிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் **அவர்கள் மூன்று சிறுவர்கள்** என்ற அழகானநாமம் பூண்ட இப்புத்தகத்தைப் படிக்கவேண்டியது அவசியம்.

**விலை பிரதி ரூபா 2 சதம் 50.**
**தபாற்கூலி சதம் 30.**

**கிடைக்கும் விலாசங்கள்:**

1. மனேஜர், அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.
2. கட்டளைச்சுவாமியார், பத்திமாகிரி, பண்டத்தெருப்பு.
3. திருக்குடும்ப கன்னிகாமடம், இளவாலை.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருவிருதய இரக்கத்தினலும், அர்ச். லூர்துமாதா, அர்ச். றீத்தம்மாள், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களின் இரக்கத்தினலும் நான்கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். அவர்கள் நாமங்கள் புகழப்படுவதாக.

சூராவத்தை R. M. மலர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

புங்குடுதீவிலே கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் அர்ச். அந்தோனியாரிடம் நான் செய்துகொண்ட விண்ணப்பத்தின்படி எனது தந்தையார் ஈடுபட்டிருந்த வழக்கு அவருக்குச் சாதகமாகத் தீர்ந்தது. வழக்காளிகளின் உண்மையைப் பாதுகாக்கிறவரான அர்ச். அந்தோனியாரின் நாமம் புகழப்படுவதாக!

புங்குடுதீவு. எஸ். எம். எவ். எக்ஸ்.

அமெரிக்க ஐக்கியதேசத்துக்கும் வட அத்திலாந்திக் நாடுகளாகிய பிரித்தானி, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸெம்போர்க், தென்மார்க், நோர்வே, இத்தாலி எனும் எட்டு நாடுகளுக்குமிடையே ஒழுங்காயிருக்கும் உடன்படிக்கையின்பேரில் அமெரிக்க அரசு அவைகளுக்கு 100கோடி டலர் பெறுமதியான யுத்த உபகரணங்களை அனுப்பவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணமும் குடிதண்ணீரும்

யாழ்ப்பாணப் பட்டணத்துக்குக் குழாய்மூலம் நல்லகுடிதண்ணீர் உதவுதற்கென்று 1923-ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிட்டத்தின் வரலாற்றை யாழ்ப்பாணநகரசங்கத்தின் விசேஷ கூட்டத்திலே மேயர் சி. பொன்னம்பலம் அவர்கள் விளக்கிக்காட்டி அது இன்னும் ஓர் முடிவுக்குவரவில்லையெனக்குறிப்பிட்டனர். கரையூரையடுத்துக் கடற்கரைத்தெரு முதலாம் பகுதிகளுக்கும், பின்னர் பெரிய கடைக்கும் சோனகதெருவுக்கும் குழாய்மூலம் தண்ணீர் உதவுவதை ஆரம்பிக்கும்படியாக மத்தியஅரசாங்கத்தைக் கேட்கவேண்டுமெனச்சங்கம் தீர்மானித்துள்ளது

### குடியேற்றமும் பழையவீடுகளும்

கரையூர்த்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள புதியவீடுகளிற்போய்க் குடியேறுகிறவர்கள் முன்னர் வசித்திருந்த வீடுகளை இடிப்பதற்கும், இந்தவீடுகள் இருந்துவந்த காணிகளைவாங்கி அவற்றிலே மாதிரிக்குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கும்அங்கீகாரம்அளிக்குமாறு சுகாதார மந்திரியாரைக்கேட்பதற்கு யாழ்ப்பாண நகரசங்கம் தீர்மானித்திருக்கிறது.

### புதிய றெஸ்ற்ஹவுஸ்

யாழ்ப்பாண நகரசங்கத்தின் விசேஷ கூட்டம் ஒன்று சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்று, அதிலே கடற்கரையின்பக்கமாக ஓர்புதிய றெஸ்ற்ஹவுஸ் கட்டுவதற்கு ஏகமனதாகச் சம்மதம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தறெஸ்ற்ஹவுஸிலிருந்து கிடைக்கும் ஆதாயங்கொண்டு சங்கம் திரும்பக்கொடுக்கக் கூடியதாய் மத்தியஅரசாங்கம் நீண்டகாலத்தவணையிலே ஒரு தொகைப் பணம் சங்கத்துக்குக் கொடுத்துதவ வேண்டுமென்று மேயர் சி. பொன்னம்பலம் அவர்கள் ஆலோசனை கூறினர். திரு. ஏ. எம். புறூடி அவர்கள் இந்த ஆலோசனையை ஆதரித்தனர். சங்கம் கடன்பணமனுவைச் சமர்ப்பிக்கும் போது, அதனைச்சிபாரிசு பண்ணுவதாகக் கூட்டத்தில் சமுகமளித்திருந்த ஸ்தலதாபன கொம்மிஷனர் சம்மதித்தனர். கடலணை நிலத்திலே றெஸ்ற்ஹவுசைக்கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

### டக்றரின் தற்கொலை

சாவகச்சேரிப்பகுதி வைத்திய அதிகாரியாய் இருந்துவந்தவரான டக்றர் என். அம்பலவாணர் யாழ்ப்பாணறெஸ்ற்ஹவுஸிலுள்ள அறையொன்றில் சென்றவெள்ளிக்கிழமை சாயந்தரம் இறந்துகிடக்கக் காணப்பட்டனர். விசாரணைநடத்திய யாழ்ப்பாணநீதிபதி திரு. கொன்றுட் பெரேறு அவர்கள் தமது அறிக்கையிலே, காலஞ்சென்றவர் புத்திச்சுவாதீனமற்ற நிலைமையிலே சாராயத்தில் அசிட்டைக்கலந்து பருகித் தற்கொலைசெய்துகொண்டாரெனத் தெரிவித்திருக்கின்றார்.

### மானிப்பாய்க் கிராமச்சங்கம்

மானிப்பாய்க் கிராமச்சங்கத்தின் தலைவராக நவாலிச்சனசமூக நிலையத்தின் தலைவரான திரு. வி. மகேசன் அவர்கள் தெரியப்பெற்றிருக்கின்றார். தற்போதைய மானிப்பாய்க் கிராமச்சங்கம் ஆனைக்கோட்டை, சுதுமலை, சண்டிலிப்பாய், நவாலிஎனும் நான்கு கிராமங்களையும் அடக்கியுள்ளது. மானிப்பாய் தற்போது ஓர்பட்டினசங்கத்தைக்கொண்டிருப்பதாலே அது இக்கிராமச்சங்கத்தில் அடங்கவில்லை. என்றாலும் மானிப்பாய்க் கிராமச்சங்கம்என்றபெயரே இன்னமும் வழங்கி வருகிறது. வருங்காலத்தில்இது நவாலிக் கிராமச்சங்கமென அழைக்கப்படும்.

### யாழ்ப்பாண வேளாண்மை

மழைபெய்துகொடாமையாலே யாழ்ப்பாணக்குடாநாட்டிலும், வடமத்தியமாகாணத்தின் சிலபகுதிகளிலும் பெரும்போக நெல்வேளாண்மை ஏறக்குறைய முற்றாக அற்றுப்போய்விட்டதென்று நீர்ப்பாசன அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார். ஆயினும் வருகிற பங்குனிமாசத்திலே இலங்கை முழுதிலும் அறுவடையாகவிருக்கின்ற பெரும்போக வேளாண்மை சென்ற வருடங்களைக்காட்டிலும் அதிகமான நெல்விளைவைத் தரும்; ஏனெனில், இவ்வருடப் பெரும்போகத்துக்கு ஆயத்தமாய்ச் சென்றவருடம் மிகப் பெருந்தொகையானநிலத்தில் நெல் வேளாண்மை நடைபெறலாயிற்றென்றும் அவர்கூறியிருக்கின்றார்.

### சவர்க்கார ஏற்றுமதி

இலங்கையிலிருந்து தற்போது வருடம்ஒன்றுக்கு 200 தொன் சவர்க்காரமே ஏற்றுமதியாகின்றது. இத்தொகைஇனி 500 தொன்னாக விசேஷமாய் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்றுமதிசெய்யப்படவிருக்கிறது. தற்போது இலங்கையிலே ஐந்துபெரிய தொழிற்சாலைகள் சவர்க்காரஞ் செய்வதில் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றன. இவற்றுடன் நின்றுபிடிக்கவியலாது சில்லறைச்சவர்க்காரத் தொழிற்சாலைகள் படிப்படியாக அற்றுப்போகின்றன. வீட்டுப்பாவனைச் சவர்க்காரங்களும், ரொய்லெற் சோப்புகளும் இறக்குமதிசெய்யத் தற்போது அனுமதியில்லை. மருந்துசம்பந்தமான சிலஅந்தர் சவர்க்காரமே இறக்குமதியாகின்றது.

### மஸ்கேலியா இடைத்தேர்தல்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் மஸ்கேலியாத் தொகுதி ஸ்தானத்துக்குப் புதியபிரதிநிதியைத் தெரிவுசெய்யும் இடைத்தேர்தல் வருகிறபங்குனிமாதம் 11-ந்திகதி நடைபெறவிருக்கிறது. இந்த ஸ்தானத்துக்குத் திரு. ஏ. அசிஸ், திரு. ஜி. ஆர். இராஜபெரியார் எனும் இருவரும் போட்டியிலேதெரிவுக்கு முன்வந்திருக்கின்றனர்.

### குடிவகை நீக்கமனு

மட்டக்களப்புப் பட்டினசங்க எல்லைக்குள் வசிக்கும் ஐஞ்ஞூறு பேர்வரையில்சேர்ந்து அப்பட்டினசங்க எல்லைக்குள்ளே குடிவகைகளின் விற்பனவை நீக்குதற்குச் சனசம்மதி கேட்கப்படவேண்டுமென்றுவேண்டிக் கீழ்மாகாண ஏசன்றருக்குத் தங்கள் கையொப்பத்துடன் ஓர் மனுப்பத்திரம் சமர்ப்பித்திருக்கின்றனர். இது அங்கே சமீபத்தில் ஆக்கப்பட்ட "தொழில் ஐக்கிய சங்க" த்தின் இயக்கமாகும்.

### தீக்கெற்இல்லாது பிரயாணம்

றெயின்வண்டிகளிலே திக்கெற் இல்லாது பிரயாணஞ் செய்கிறவர்களுக்கு இப்போது அபராதமே விதிக்கப்படுகிறது; ஆனால் இவர்களுக்குச் சிறைத்தண்டனை விதிப்பதற்கான சட்டம் ஒன்று இயற்றப்படவேண்டுமெனப் போக்குவரத்துமந்திரியார் சேர்ஜோண் கொத்தலாவெலைஅவர்கள் மந்திரிசபையின் அங்கீகாரத்துக்கென்று ஓர் யோசனைசமர்ப்பித்திருக்கின்றார். தற்போது றெயின்வண்டிகளிலே திக்கெற் இல்லாமல் பிரயாணஞ்செய்கிறவர்களுக்கு 2 ரூபா 50 சதம் அபராதம் விதிக்கவும், திக்கெற்சலாரை அறவிடவுமே சட்டம்அனுமதிக்கின்றது.

### மத்தியகலாசாலை அதிகாரி

கீழ்பெரும்பாக வித்தியாதிகாரியாய் இருந்துவந்த திரு. எஸ். ஜே. குணசேகரம்அவர்கள் அரசினர்மத்தியகலாசாலைகளின் அதிகாரியாகக் கொழும்புக்கு மாற்றப்பட்டு இம்மாதம் 1-ந் திகதியன்று தம்பதவியைக் கையேற்றிருக்கின்றார்.



ஸ்ரீமதி
அன்னம்மா ஞானப்பிரகாசம்
மரணத்திரையில் மறைந்த
**நான்காம் வருட**
**ஞாபகம்.**

பிறப்பு—25 - 11 - 1899
இறப்பு—13 - 2 - 1946

இதனைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், மற்றும் அன்பர்களும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு பரிவாக வேண்டுகின்றோம்.

பாதுகாவலன் பத்திராசிரியரும்
பிள்ளைகளும்.

யாழ்ப்பாணம்
9–2–50

# இராசமுருக்கின் குரலொலி

1. வாரும் மகிழ்வாக மாதாவின் பக்தர்காள்!
 வானம் அளாவியே காணுகுதே!
பாரும் முதிர்ந்த இராசமுருக் கதோ!
 பத்திமா கிரியில் தோணுகுதே!

2. பண்டு புகழ்பெற்ற பண்டத்தெருப்பிலே
 பாரிய வோர்தரு வாம்இதுவே!
அன்று போர்த்துக்கீசர் நாட்டிய தாமென
 ஆன்றோர் பலரும் அறைகுவரே?

3. பூதகணம் இந்த இராசமா முருக்குப்
 பொந்தின் புதையலைக் கட்டிக்காக்கும்
நூதன செய்தியைக் கேட்டுத் திகைத்திடின்
 நூதன மாகுமோ பூதலமே

4. பொந்திற் புதையல்கள் உண்டு பலஎன்றார்
 போடப் பலிவந்து சேருமென்றார்
முந்திய காலத்து முன்னோர் கதைஇது
 முன்னர்தொட் டேஇங்கு சொல்லிவந்தார்

5. மாற்ற மடைந்த விராச முருக்கிலே
 மாமரி அன்னை எழுந்தருள
காற்றாய்ப் பறந்தன பூதபை சாசமே
 கட்டுக் கதையென்று ஆயினதே

6. பத்திமா நாயகி இராச முருக்கிலே
 பாங்காய் எழுந்து இலங்குகிறார்
பத்தியாக என்றும் கூடியே அன்னையைப்
 பக்தர்கள் அன்பாக வேண்டுகின்றார்

7. யாழ்பதி யாகிய எம்தமிழ் நாட்டிலும்
 யாம்கொண்ட பத்திமா நாயகியை
யாழ்குழல் ஆதிய கொண்டு இசைத்துமே
 யாண்டுந் துதித்துக் கொண்டாடுவமே

8. மூன்று சிறுவர்கள் மூலிய மாய்அன்று
 முத்தர்கள் ராக்கினி கேட்டபடி
ஞான்றும் செபதபம் செய்ய மறவாது
 ஞாலமே நல்லோராய் வாழுவமே!

9. மண்ணிற் சமதர்மம் மக்களின் கண்ணிலே
 மண்ணினை வாரி இறைக்குதையோ!
எண்ணிற் சமாதானம் கண்ணிலே காணாது
 எங்கும் உலகம் திகைக்குதையோ!

10. நாடுகளே மகா நாடுகள் கூடியே
 நாளும் அறைவது போர்முரசே!
நாடுஞ் சமாதானம் யாவும் வெறும்போலி
 நாடகம் அல்லாது வேறிலையே!

11. பொல்லா அணுக்குண்டு போக வந்ததின்று
 போட்டியிலே சல வாயுக்குண்டு
எல்லா உலகமும் ஏங்கித் தவிக்குதே
 என்ன அழிநாடு வந்திடுமோ?

12. மக்கள்நாம் ஈடேற மாதாதந்தா இரு
 மாட்சியான குண்டு காட்சியிலே
மிக்க செபதபம் என்று அறிவோமே
 மேலான அவ்விரு குண்டுகளும்

13. நாடெங்கும் பத்திமா ஆகி வரவேண்டும்
 நாஸ்திக ருஷியா மாறவேண்டும்
வீடெங்கும் மாலையாய் ஓதி வரவேண்டும்
 வேறேது நன்மதி கூறவேண்டும்

14. கேடுகள் சூழுதே காலம் வீணாகுதே
 கேவல மாகுதே பாருலகம்
நாடுவீர் பத்திமா நாயகி பாதமே
 நானிலம் ஈடேற வேண்டுமெனில்!

15. பத்திமா கிரிக்கு யாத்திரை செல்லுவோம்
 பக்தியா கச்செப மாலைசொல்வோம்
அத்தியந்த மகிழ் வாகவே ஈசனின்
 அன்னையைத் தேடிச் சரணடைவோம்

16. சீர்தங்கு இராச முருக்கின் குரலொலி
 தேங்கிப் பரவுது நாட்டினிலே
பேர்தங்கு நல்லிதழ் மாதந் தவறாது
 பெற்றுப் படித்து மகிழ்வீரே

"ஆனந்தா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேத விஞவிடை

— V —

சுதனுனவர் எங்கள் மீட்பர்

(2) நற்கருணை.

45. நற்கருணை ஆவது என்ன ?

யேசுநாதருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்தும போசனமாகத் தந்து நம்மைப் பரிசுத்தமாக்கி, நமதுநித்தியசீவியத்தின் ஏகநம்பிக்கையான அவரால் சீவிக்கத் தேவஉதவியைத் தரும் திவ்வியனுமானமே நற்கருணையாம்.

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டு...ஏனெனில் என் மாம்சம் மெய்யாகவே போசனமும், என் இரத்தம் மெய்யாகவே பானமுமாயிருக்கின்றது" — அரு. VI. 55—56.

46. நற்கருணையை யேசுநாதர் ஏற்படுத்திஞரா ?

ஆம். அவர் தாம் பாடுபடுகிறதற்கு முந்தினநாளாகிய பெரிய வியாழக்கிழமை கோதுமை அப்பத்தைத் தமது கையில் ஏந்தி "இது நமது சரீரம், இதைப் புசியுங்கள்" என்றும், முந்திரிகைஇரசத்தைக் கையில் ஏந்தி "நீங்கள் எல்லோருமிதைப் பானம்பண்ணுங்கள், ஏனெனில் உங்களுக்காகச் சிந்தப்படும் நமது இரத்தம் இதுவே" என்றும் திருவுளம்பற்றி அதை ஏற்படுத்திஞர். (மாற். IV. 22, மத். XXVI. 27.)

47. நற்கருணையின் திவ்விய னுமானப் பொருள் என்ன ?

பூசைப்பலியில் சருவேசுரனுக்குக் காணிக்கையாக்கப்பட்ட கோதுமை அப்பமும் முந்திரிகை இரசமுந்தான்.

48. நற்கருணையின் மாத்திரை என்ன?

"இது நமது சரீரம், இது நமது இரத்தம்" என்று குருவானவர் பூசைப்பலியின் தேவவசீகர நேரத்தில் யேசுக்கிறீஸ்துநாதருக்குப் பதிலாக உச்சரிக்கும் வார்த்தைகள் தான்.

49. தேவவசீகர வார்த்தைகள் உச்சரிக்கப்பட்டபின் அப்பமும் இரசமும் மெய்யாகவே யேசுநாதருடைய சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகின்றனவா ?

ஆம். ஏனெனில் யேசுநாதர் அப்பத்தை உண்மையாகத் தமது சரீரமென்றும், இரசத்தை உண்மையாகத் தமது இரத்தமென்றும் போதித்தது மாத்திரமல்ல, அந்தப்போதனையை விசுவசிக்காதவர்களைத் தம்மில் நின்று அகன்றுபோகவும் விட்டுவிட்டார்.

"நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் சீவியத்திற்காக (நான் கொடுக்கும்) என் மாம்சமே என்ருர்....அவருடைய சீஷர்களில் அநேகர் இவைகளைக் கேட்டு: இது கடினவாக்காயிருக்கிறது; இதை யார் கேட்கக்கூடும் என்ருர்கள்...அதுமுதல் அவருடைய சீஷர்களில் அநேகர் பின்வாங்கி, அதன்பின் அவரோடு சேர்ந்து போகாதிருந்தார்கள்" அரு. VI. 52. 61, 67.

50. யேசுநாதர் அப்பத்தினதும் இரசத்தினதும் குணங்களுக்குள்ளே எப்படி இருக்கிருர் ?

அவர் அப்பவஸ்து இல்லாத அப்பத்தின் குணங்களுக்குள்ளேயும், இரசவஸ்து இல்லாத இரசத்தின் குணங்களுக்குள்ளேயும் சுத்த வஸ்துவாய் நமது ஐம்புலன்களுக்கு எட்டாதவிதமாய் இருக்கிருர்.

51. யேசுநாதர் ஒவ்வொருவகைக் குணங்களுக்குள்ளேயும் முழுவனையாய் வருகிருரா ?

ஆம். யேசுநாதர் பூசைப்பலியில் மரிக்காதபடியால், ஒவ்வொருவகைக் குணங்களுக்குள்ளேயும் சரீரத்தை அல்லது இரத்தத்தைத்தொட்டு முழு மனித சுபாவத்தோடும், தேவசுபாவத்தோடும் வருகிருர். ஆகையால்தான் ஒருவகையில் மாத்திரம் அபாத்திரமாய் பெற்றுக்கொள்ளுகிறவன் யேசுநாதருடைய சரீரத்தின்மட்டிலும் இரத்தத்தின் மட்டிலுங் குற்றவாளியாகிருன் என்று அர்ச். பாவிலுவானவர் சொல்லுகிருர்.

"யாதாமொருவன் அபாத்திரமாய் இந்தஅப்பத்தைப் புசிப்பாஞகில் ஆண்டவருடைய சரீரத்தின்மட்டிலும் இரத்தத்தின் மட்டிலுங் குற்றவாளியாவான்"— 1. கொ. XI. 27.

52. ஆகையால் இருவகையில் உட்கொள்ளும் குருவானவர் ஒருவகையில் உட்கொள்ளும் விசுவாசிகளிலும் அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளுகிருரோ ?

இல்லை. ஒருவகையில் உட்கொள்ளும் விசுவாசிகளும் யேசுநாதரை முழுமையாகவே பெற்றுக்கொள்ளுகிருர்கள்.

53. குருவானவர் தேவவசீகரமான அப்பத்தைப் பங்குபடுத்தும்போது யேசுக்கிறீஸ்துநாதருடைய சரீரத்தையும் பங்குபடுத்துகிருரோ ?

இல்லை. அப்பத்தின் குணங்கள் மாத்திரமே பங்குபட யேசுக்கிறீஸ்துநாதர் ஒவ்வொரு பங்கிலும் முழுமையாய் இருக்கிருர்.

54. நற்கருணையை நிறைவேற்றும் அதிகாரி ஆர் ?

அபிஷேகம்பெற்ற குருவானவர் மாத்திரம் அப்பத்தையும் இரசத்தையும் தேவவசீகரமாக்கி நற்கருணையை நிறைவேற்றலாம். நிறைவேற்றினபின் சாதாரணமாய் அவர்தான் நற்கருணையைச் சனங்களுக்குக் கொடுக்கலாம். ஆனல் மிகவும் அவசரமான நேரத்தில் குருவானவர் இல்லாவிட்டால் குருவானவரால் நிறைவேற்றப்பட்ட நற்கருணையைத் தியாக்கோன் கொடுக்கலாம்.

55. நற்கருணையைப் பெற்றுக் கொள்ளத் தகுதியாளி ஆர் ?

ஞானஸ்நானம்பெற்று, சாவான பாவங்களைப் பச்சாத்தாபத்தினலே போக்கிப் பிரசாதநிலையிலும் நற்கருத்துடனும் சுத்தஉபவாசமாயும் இருப்பவனேயாம்.

56. சாவானபாவத்தோடு நற்கருணையை உட்கொள்வது பெரும் பாவமா ?

ஆம். அது தேவதுரோகம் என்னும் மகாபாதகமான பாவம்.

"ஆண்டவருடைய சரீரமென்று நிதானித்துணராமல், எவன் அபாத்திரமாய்ப்புசித்துப் பானம் பண்ணுகிருனே, அவன் தன் ஆக்கினைத் தீர்ப்பைப் புசித்துப் பானம்பண்ணுகிருன்"— கொரி. XI. 29.

57. ஒவ்வொருமுறையும் நற்கருணை வாங்கமுன் பாவசங்கீர்த்தனம் பண்ண வேண்டுமோ ?

இல்லை. சாவானபாவத்தில் விழுந்தால்மாத்திரம் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறது அவசியம்.

58. நாம் நற்கருணை வாங்குவதற்கு வேண்டிய நற்கருத்து என்ன ?

வாழ்க்கை, முகத்தாட்சணியம் முதலிய கருத்துக்களை முற்றிலும் அகற்றிச் சருவேசுரனுக்குப் பிரியப்படுவது, அவருடைய சித்தத்துக்கு அமைவது, ஆத்துமத்துக்குப் பிரயோசனமடைவது இவை முதலியவைகளாம்.

59. சுத்த உபவாசம் என்றுல் என்ன ?

நடுச்சாமத்தொடங்கி நற்கருணை வாங்குமட்டும் ஒன்றும் சாப்பிடாமலும் குடியாமலும் இருப்பதேயாம்.

60. சுருட்டு வெற்றிலை முதலியவற்றைப் பாவிப்பது சுத்த உபவாசத்துக்கு விரோதமோ ?

இல்லை. ஆனல் அதை ஒருநியாயமுமில்லாமல் பாவிப்பது நற்கருணைக்கு மரியாதைக்குறைவு.

61. நற்கருணைவாங்கக் கிறீஸ்தவர்களுக்குக் கடமை உண்டா ?

ஆம். முதல் நற்கருணை புத்தி விபரம் அறிந்தவுடனும், பாஸ்கு நற்கருணை புத்திவிபரம் அறிந்தபின் ஒவ்வொரு வருஷப் பாஸ்குகாலத்திலும், வழித்துணை நற்கருணை மரணச்சமீபத்திலும் வாங்கக் கிறீஸ்வர்களுக்குக் கடமை உண்டு.

62. சிறுவர்களை முதல்நற்கருணை வாங்க விடுவதற்கு வேண்டிய நிபந்தனைகள் எவை ?

1-வது அவர்கள் புத்திவிபரம் அறியும் (அநேகமாக ஏறக்குறைய ஏழு) வயதுள்ளவர்களாய் இருக்கவேண்டும். 2-வது பிரதான வேதசத்தியங்களைத் தங்கள் வயதுக்குத்தக்கபடி அறிந்திருக்கவேண்டும். 3-வது நற்கருணையின்பேரிலே தங்கள் வயதிக்குத்தக்க பத்தியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். இந்த நிபந்தனைகளுக்குமேல் வேறொன்றையும் திருச்சபை கற்பிக்கவில்லை.

63. நற்கருணையின் பாஸ்குக்கடமை தீராதவர்களுக்கு வருஷக்கடமை இருக்கிறதா ?

ஆம். ஏனெனில் வருஷத்தில் ஒருமுறை நற்கருணை வாங்கவேண்டுமென்றும் அதைப் பாஸ்குகாலத்தில் வாங்க வேண்டுமென்றும் இரண்டு கற்பனைகள் நமக்கு உண்டு. ஆகையால் ஒரு வருஷத்துப் பாஸ்குகாலத்தில் வாங்கத் தவறினல், அந்தவருஷம் முடியமுதல் என்கிலும் வாங்கக் கடமை உண்டு.

64. வழித்துணை நற்கருணை வாங்குவதற்கு முதல்நற்கருணை பெற்றும் மாணவருத்தமாயும் இருக்கவேண்டுமோ ?

இல்லை. புத்திவிபரம் அறிந்தவர்கள் முதல்நற்கருணை பெற்றிருக்காவிட்டாலும் இதைப் பெறலாம். ஒரு வருத்தமும் இல்லாதவர்கள் யுத்தத்தினலே அல்லது வேறு காரணத்தினலே மரணச்சமீபத்தில் இருந்தால் இதைப் பெறலாம்.

65. அடிக்கடி நற்கருணை வாங்குவது நல்லதோ ?

ஆம். அடிக்கடி மாத்திரமல்ல நாள்தோறும் வாங்குவது மிகவும்நல்லது. அதனல் நமது ஆத்துமங்களுக்குக் கணக்கில்லாத நன்மைகள் உண்டாகும்.

"வருத்திச் சுமை சுமந்திருக்கிறவர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன்" மத். XI. 28.

66. நாம் நற்கருணையில் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் எவை ?

நமது ஞானச்சீவியத்தை அதிகப்படுத்துகிற பரிசுத்தமாக்கும் பிரசாதமும், நமது ஏகநம்பிக்கையான யேசுநாதரால் சீவிக்கப்பண்ணுகிற திவ்விய அனுமானப் பிரசாதமுமாம்.

"என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியம் உண்டு. கடைசிநாளிலே நான் அவனை உயிர்ப்பிப்பேன் ... என்னைப் புசிக்கிறவன் என்னல் சீவிப்பான்"— அரு. VI. 55, 58.

பாலைதீவு

# அர்ச். அந்தோனியார் திருநாள்

## 12-3-50



இத்திருநாள் மகோற்சவம் பங்குனிமாதம் 7-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 11-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார் திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப் பிரகாரம் செய்யப்பெறும். ஞாயிற்றுக்கிழமை 4-30 மணிக்கும், 7 மணிக்கும் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானகடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்.

1-வது பெரியகடல் லைசென்சுள்ள மோட்டார்லான்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும்.

2-வது **வத்தைகளிலும், மோட்டர் லான்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**

3-வது தண்ணீர் குறைவாயிருப்பதினல் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.

4-வது **செபமாலைக் கடைகளும், தேநீர்— உணவுகடைகளும்மாத்திரமே கட்டலாம்.**

5-வது கடைகட்ட விரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும். தீன்பண்டங்களைக் கண்ணுடிப்பெட்டிகளில் வைத்துக் காப்பாற்றவேண்டும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் உணவுகள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

கட்டளைக்தரு

### ஓர் அறிவித்தல்

சென் வின்சென்ற் டீ போல் தருமசபை, அர்ச். சூசையப்பர் பந்தியின் வருடாந்த பொதுக்கூட்டம் இந்தமாசி மாதம் 12-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திவ்வியசற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சென் சாள்ஸ்பா[illegible] நடைபெறும்.

இப்பந்தியின் தருமவிஷயத்தில் ஊக்கமுடையவராயிருக்கும் சகலரையும் அத்தருணம் சமுகந்தரும்படி வெகுவிநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அர்ச். சூசையப்பர் பந்தியின்
அங்கத்தவர்

❀ அமெரிக்கபிரசாதிபதி ட்ருமன் அவர்களும், அத்தேசத்தின் பிரதம இராணுவ அதிகாரிகளும், மந்திரிசபை அங்கத்தவர்களும் வெண்மாளிகையிற் கூடி அணுக்குண்டைக்காட்டிலும் எத்தனையோமடங்கு அதிகம் சக்திவாய்ந்த சலவாயுக்குண்டைப்பற்றி மணித்தியாலக்கணக்கிலே கலந்து ஆலோசித்ததாக வாஷிங்ரன் நகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சமாதான நீதவானுக்குக் குதூகல வரவேற்பு

மன்னார்க்கச்சேரியிலே தைமாசம் 9-ந்திகதி பிற்பகல் 4-30 மணிக்கு வங்காலைக் கிராமச்சங்க தலைவரும், மன்னார்ப்பகுதிக் கிராமச்சங்க தலைவர்கள் சங்கத்தின் அக்கிராசனருமாகிய திரு. செ. ஜோண் மார்க்அவர்கள் சமாதான நீதவானாக விசுவாசப்பிரமாணஞ்செய்யும் வைபவம்நிகழ்ந்தது. இதற்கென மன்னார்ப்பகுதி முழுவதிலுமிருந்து வந்துகூடிய பிரமுகர்களால் கச்சேரி மைதானம் தேங்கியது. அவர் 4-30 மணிக்கு வண. பீற்றர் சுவாமியார், வண. பொமிக்கல்சுவாமியார், உதவிஸ்தலதாபன அதிபர் திரு. ஏ. ஏ. யோசெவ் அவர்கள், திரு. V. C. சண்முகம், வடமாகாணம் V.C.I.D. அவர்கள், எஸ். பாஞ்சோதி, வடமாகாணம் சனசமூகநிலைய உத்தியோகஸ்தர், மன்னார் கி.ச.சுப்பிறின்ரெண்டன் N.செல்லையாமுதலாம் பெரியோர்கள்சமேதராய்க் கச்சேரிசென்று மன்னார்உதவி அரசாங்கஅதிபர் சமுகமாக, மன்னார் டிஸ்திறிக் உதவிநீதிபதி M. பீலிக்ஸ் போல்அவர்கள் முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ்செய்து முடித்துக் கொண்டு அங்கிருந்தும் வெளியேறினார்.

அப்போது மன்னார்ப்பகுதிக் கிராமச்சங்கத்தலைவர்கள் சங்கத்தினாலும் அநேகஅன்பர்களாலும் பூமாலைகளும், பொன்மாலைகளும் சூட்டப்பெற்றுப் பாண்டுவாத்தியம் இசைக்க, வெடிகள் சப்திக்க மிக ஆடம்பரமாய்க் குருமாரும், பெரியோர்களும் மருங்கில்வர, மன்னார்ப்பட்டினத்து உத்தியோகஸ்தர்கள், மன்னார்ப்பகுதி முழுவதிலும் இருந்துவந்த பதின்மூன்று கிராமச்சங்கங்களின் தலைவர்கள், அங்கத்தவர்கள், கிராமமுன்னேற்ற சங்கங்கள், சனசமூகநிலையங்களின் பலபிரதிநிதிகள், கிராமமக்கள் ஆதியோராய் ஈராயிரவருக்கு அதிகமானபெருமக்களின் பெருங்கூட்டம் புடைசூழ ஊர்வலமாக மன்னார் அர்ச். சவேரியார் கல்லூரி மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வழிநீளம் அவரது அன்பர்கள்பலர் மாலைசூட்டியவண்ணமாயிருந்தார்கள்.

கல்லூரிமண்டபத்திலே மன்னார்ப்பகுதிக் கிராமச்சங்கதலைவர்களின் சார்பில், மன்னார்ப்பகுதி உதவிஅரசாங்க ஏசன்றர் அவர்களின்தலைமையில் புதிய சமாதானநீதவானைப்பாராட்டி ஓர்உபசரணை நடைபெற்றது. அத்தருணம் ம. ப. கி. ச. த. சங்கத்தினரால் அழகியதோர் வாழ்த்துஇதழ் படித்து வழங்கப்பட்டதுடன் திரு. வி. மொ. கபிரிகேற்புலவராலும், திரு. பா. பிலேசியான்சோசை அண்ணாவியாராலும், வங்காலைப்பாலியர்களாலும் வாழ்த்துக் கவிகளும் ஆசிக்கீதங்களும் படிக்கப்பட்டன. யாழ்ப்பாண உதவிமேற்றிராணியாண்டவர், தபால்-தந்தி மந்திரியார் C. சிற்றம்பலம் ஆதிய பெரியோர்களிடமும், இன்னும்அநேக அன்பர்களிடமுமிருந்துவந்த சோபனதந்திச்செய்திகள் சபையில் படிக்கப்பட்டன.

அவ்வேளை மன்னார்உதவிஏசன்றர் ஆர். எல். ஆணல்டா அவர்களாலும், மன்னார்மூப்புச்சுவாமியார் வண. எஸ். பீற்றர்சுவாமிஅவர்களாலும், மன்னார் அதிகாரம் J. N. அபுல்காசிம் மரைக்கார் J. P., உதவிஸ்தல தாபனஅதிபர் A. A. யோசெவ், மன்னார்டிஸ்திறிக் கி. மு. சங்க சுப்பிறின்ரெண்டன் V.K. சுப்பிரமணியம், மன்னார்டிஸ்திறிக் கி.ச. தலைவர்சங்க உபதலைவர் M. P. M. முகம்மதுகாசிம் ஆலீம்ஆகிய கனவான்களாலும் புதியசமாதான நீதவானைப் பாராட்டிச் சொற்பொழிவுகள்பல ஆற்றப்பட்டன. அவற்றின்சாராம்சமாவது.

திரு. ஜோண்மார்க்அவர்கள் இக்கண்ணியம் அடைந்ததில் இந்நாட்டு மக்கள் பெருமையடைகிறார்கள். பெரியதனவந்தர்களுக்கும், கல்விமான்களுக்கும், அரசாங்கத்தில் நீண்டகாலம் உயர்ந்தஉத்தியோகம்புரிந்து இளைப்பாறுகிறவர்களுக்கும் மாத்திரம் கிடைக்கும் இந்தக்கௌரவம் தன் தாய்ப்பாஷையைத்தவிர ஆங்கிலம்பயிலாத—ஒருதனவந்தராகவோ, அரசாங்கத்தில் பெரியஉத்தியோகம் செய்தவராகவோஇல்லாத ஒருகிராமவாசிக்கு 36 வயசு நிரம்பாத இத்தனை இளம்வயசில் கிடைத்தது இலங்கையின் சரித்திரத்தில் இதுவே முதல்தடவையாகும். அவரது அரும்பெரும் சேவைகளே இதற்குக்காரணமாகும். அவர்நாட்டுக்குப்புரிந்த் சேவைகளின் பேறாகவே கௌரவமிக்க அதிபொறுப்பான இப்பதவியை அடைந்தார். அவர்இதற்கு முற்றுந்தகுதியுடையவர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவரைப்போன்ற ஊக்கமும் விவேகமும்உள்ள இன்னும் ஒருசிலர், சிறந்ததலைவர்கள் இல்லாக் குறைவால் விருத்தியற்றிருக்கும் இம் மன்னார்ப்பகுதிக் கிராமங்களிடையே தோன்றுவார்களானால், அவற்றின் மேனிலையையிட்டு மன்னார்ப்பகுதிமக்கள் யாதொருகவலையும்இன்றி யிருக்கலாம். எச்சமயத்தும் எப்படிநோக்கினும் திரு. ஜோண்மார்க் அவர்கள் ஒருபொதுநல ஊழியராகவேதோன்றுகிறார். அவர்ஒருபிரபல வைத்தியராகவிருந்தும் தனதுநேரத்தையும், வருவாயையும் பொதுசன தொண்டில் தமக்குவரும் செலவையும் பாராது நாட்டுக்குப்பணிபுரிந்துவருகிறார். அவரை ஓர்சிறந்த நாட்டன்பர் என்று யாருந்தடையின்றிக் கூறலாம். இந்தக் கௌரவத்தை அடைவதற்கேதுவாய் இருந்த அவரதுகடந்தகால நடபடிகளைப்போலவே எதிர்காலமும் இருக்குமானால் நம்நாட்டுக்கு அதுநல்லதிஷ்டமாகும்.

புதியசமாதானநீதவான் தமதுநன்றியைத் தெரிவித்துக்கொண்டார். திரு. மீரா மொகைதீன், ம. ப. கி. ச. த.சங்கக்காரியதரிசி என்பவர்களால் பொதுவில்நன்றிகூறப்பட்டபின் தேநீர்உபசாரணை நிகழ்ந்து விழா சிறப்பாய்முடிவுற்றது.

—நிருபர்

## மரணசங்கதி

பூநகரிப்பதிவாசரும், பலராலும்நன்கறியப்பட்டவரும், உயர்வேளாண்மரபினருமாகிய காலஞ்சென்ற திரு. யோண் யுவக்கீம்பிள்ளைறேஞ்சர் அவர்களின் பாரியாராகிய திருமதி வோர்த்தாப்பிள்ளை பொன்னுஅவர்கள் வயிற்றில்உண்டான கடினநோய் காரணமாக அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சென்ற 4-2-50 வெள்ளிவாரம் தம்ஆன்மாவைப் படைத்தோன் கையில் ஒப்படைத்து மரணநித்திரையாயினர். மரிக்கும்போது இவருக்கு வயசு 62. இப்பூநகரிப்பகுதியில் குடியேறிய பழம்பெருமைவாய்ந்தகத்தோலிக்கரில் இவரும் ஒருவராயிருந்தார். இருபதுஆண்டளவாக இப்பகுதியில் சிறந்தஆசிரியராகத் தொண்டாற்றியுள்ளார். பூநகரி அரசினர்ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் திரு.ஜே.அந்தோனிப்பிள்ளை, திரு. ஜே. மரியாம்பிள்ளை என்பவர்களும், திருநெல்வேலி அரசினர் கமப்பாடசாலையில் பயிற்சிபெறும் திரு. ஜே. வீரசிங்கம் என்பவரும் இவரதுபுத்திரராவர். மறுநாட்காலை பெருந்திரளான இனசனர் சிநேகிதர் கூடியசமுகத்திலே இவர்பிரேதம் அழகியபேழையில்வைத்துச் சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று. இவரைஇழந்து துன்புறும் புத்திரர், மருமக்கள் ஆதியோருடன் நானும் அனுதாபப்படுகின்றேன். —கடிதர்

R. I. P.

❀ அமெரிக்க ஐக்கியதேசத்திலே நீரழிவுச்சங்கமென ஒன்று இருந்து வருகிறது. இது வருடம்ஒருமுறை அத்தேசமக்களைப் பரிசோதனைசெய்து ஆரம்பநீரழிவுகாரரைக் கண்டறிந்து காலநேரத்துடனேயே அவர்களின் நோயைக் குணமாக்கிவிடுகிறது. தற்போது திருத்தமானமுறையில செய்யப்படும் இன்சூலின்கொண்டு சிகிச்சை செய்வதாலே அவர்கள் குணமடைந்து விடுகிறார்களாம்.

## தாதையைப் பிரிந்த தலைமன்னார்

நிகழ்மதி 5-ந்திகதிஞாயிறுவாரம் சுமார் ஈரிரண்டுமணி. கோவில்மணிகள் கணீர் கணீரென ஆர்ப்பரித்தன. இன்று ஏதோ விசேஷமென ஆலயத்தை நோக்கிநடந்தேன். வழியிற்சந்தித்த பலரையும் வினவினேன். மனநிம்மதி ஏற்பட்டபாடாயில்லை. நேரே கோவில்சென்று மணிஅடித்துக் கொண்டுநின்றவரை நேரில்கண்டு இன்றுஎன்னவிசேஷம்? என்று கேட்டேன். அவர் நீண்டதோர் பெருமூச்செறிந்து உமக்குஇன்னும்தெரியாதா? நமதுஆரிய கட்டளைக்குரவர், நம்ஆலயத்தையும், பாடசாலையையும் கட்டிமுடித்த நம்நேச தந்தையர் வண. ஏ. எஸ். சிங்கராயர் தாதையவர்கள் மாறிவிட்டார்; அவருக்குஇன்று பிரியாவிடைக் கொண்டாட்டம்ஒன்று நடத்தப்போகிறோமென்று மீண்டுமோர் பெருமூச்சின்மத்தியில் கண்கள்கலங்கக்கூறினார். மறுபக்கம் திரும்பிப் பார்த்தேன். இவ்வூர்மக்கள் அனைவரும் தாயைப்பிரிந்த சேய்களைப்போல் முகங்குறுகிநின்றார்கள். பலர் கூட்டம்கூட்டமாகநின்று அவரைப்பற்றியே பலவிதமாக வர்ணித்துக்கொண்டுநின்றார்கள். அதன்பின் எல்லோரும் கோவிலுட் பிரவேசிக்கவே, அவர்களுடன்நானும் ஒருவனாகக் கோவிலுக்குள் சென்றேன். பிரியாவிடைத் தாதையவர்களால் தேவநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது. அதன்மேல் ஆண்பெண்பாலார், பள்ளிச்சிறுவர் அனைவரும் குருமனைசென்று குரவரவர்களைத் துவசதோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வீதியூடே அழைத்துவந்தனர். அழகுறச் சிங்காரிக்கப்பெற்ற பாடசாலையிலே உயாரசனத்தில்தந்தைசிங்கராயர்அவர்களையும், அன்னவர்க்குப்பதிலாய் எமது புதிய கட்டளைக்குரவராக வந்திருக்கும் வண. உக்தீன்சுவாமியவர்களையும் அமரச்செய்தார்கள்.

அதன்மேல்சிறுவர்சிறுமிகள் பிரியாவிடைப் பாமாலைகள்சாற்ற, ஊர்ப்பிரபலஸ்தர்கள் பூமாலைகள்சூட்டிநின்றனர். சுவாமியவர்கள் இவ்வூருக்குவந்தது முதல் இற்றைவரைக்கும் ஆற்றியுள்ள அருஞ்சேவைகளையும், வேதகருமங்களில் அவர்காட்டிய அயராதஊக்கத்தையும, அவர்ஆற்றியுள்ள ஆலய, பாடசாலைப் பணிகளையும் வியந்துபாராட்டி ஓர்பிரிவுபசாரப்பத்திரம்படித்துக்கொடுத்துப் பொற்கிழியும் தெட்சணைவைத்துப்பணிந்தார்கள். ஈற்றில் பிரியாவிடைநாயகர்எழுந்து, தலைமன்னார்மக்களின் நற்குணத்தையும், வேதவைராக்கியத்தையும், குருபக்தியையும் வியந்துபாராட்டி இவ்வூரும், இதன் மக்களும், தொழில்துறைகளும் செல்வாக்குற்றுத்தழைத்தோங்குமாறு பரமனைப் பிரார்த்தித்துத் தமதுதிருக்கர ஆசீர்வாதம் அருளிநின்றார். கடைசியாய், சிங்காரிக்கப்பட்டிருந்த மோட்டார்வாகனத்தில் வண. சிங்கராயர்த் தந்தையைக் கரகோஷங்களிடையே பயணம்அனுப்பிவைத்து வாடிவதங்கிய முகத்துடனும், கலங்கியகண்களுடனும் யாவரும் தத்தம் இல்லமேகினார்கள். நானும் அவர்களுடன் சிங்கராயர் தந்தையை நினைந்துருகி என்வீடடைந்தேன். பரமதேவன் எம்ஞானத்தந்தை வண.சிங்கராயர்சுவாமியவர்களைத் தமது திருக்கருணைநோக்கில்வைத்துப் பரிபாலிப்பாராக சுபம்!

—மனோகரன், எஸ். கூஜ

## அன்பு நெறி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திருச்சபைகளில் ஒரோவழி வளர்ந்துவருகிறது. இனி, அது பாராளுமன்றங்களிலும் சர்வதேச சங்கத்திலும் வளர்ந்துவரின். உலகம் சமாதானத்தைக்காணுதல் ஒருதலை. அன்புநெறிப்பயிற்சிக்கென்றுவீட்டை விடுக்க வேண்டியதில்லை; காட்டுக்கு ஓட வேண்டுவதில்லை; மூச்சை அடக்க வேண்டுவதில்லை.

ஆண்டவன் உண்மையில் உறுதி, உயிர்கட்குத் தொண்டாற்றல், ஆண்டவனுக்குஅன்பு செய்தல் என்னும் உணர்வு, தேவைக்குமேல் பொருள் ஈட்டிக் களியாட்டில் அயராதிருத்தல். தவறுதல் குறித்து மனம் கசிந்து உருகி உருகி ஆண்டவனைநோக்கி அவ்வப்போது முறையிடல், அறியாமைக்குத் தண்டனை விதியாமை, அதை இரக்கத்தால் மன்னித்தல் முதலியன கிறீஸ்துவின் அன்புநெறிக்கு உரிய சாதனங்களாம்.

## தவறணை நீக்கம்

### நானாட்டான்

சுதந்திர லங்காவிலே மக்கள்மனதில் பலநவீன எழுச்சிகள் தோன்றாமல் இருக்கவில்லை. தாம் சுதந்திரமாக வாழத் தம்மை அடிமைகொண்ட எதிரிகளைத் தகர்த்தெறிய அவர்கள் விரும்புகின்றனர். இந்த நவீனஇயக்கங்களுக்கு நாம்பெற்ற அரசியல் விடுதலை முக்கிய இடம்பெறும்.

ஓர் புத்துணர்ச்சி எம் நானாட்டான் பகுதிமக்களுக்கும் உதித்தது. நாட்டின் செல்வத்தையும், சுயமரியாதையையும் ஆட்கொண்ட கொடிய மதுஅரக்கனை ஒழித்துக்கட்டிவிட முற்பட்டனர். சென்ற 25-ந் திகதி ஆர்வமும் அக்களிப்பும் பொருந்திய வாக்களிப்புத்தினமாகும். 172 வாக்காளர்களில் 163 பேர் வேண்டாமெனவும், 6 பேர் வேண்டுமெனவும் வாக்களித்தனர். 3 பேர் சமுகமாகவில்லை. எனவே, 94 வீதஆதரவுடன் மன்னார்ப்பகுதியின் 13-ம் நம்பர் கள்ளுத் தவறணை மூடப்படவேண்டியதே.

15 வருடங்களுக்குமேல் எம் நாட்டில் ஆட்சிகொண்ட மதுக்கடையை ஒழித்துக்கட்ட நடபடிக்கை எடுத்து அயராதுழைத்து ஜெயம்பெற்ற கிராம முன்னேற்றச்சங்கத்தாருக்குப் பொதுமக்கள் யாபேரும் நன்றியறிதல் உடையோராவார்கள். இதனைத்தொடர்ந்து மன்னார்ப்பகுதியில் பல மதுக் கடைகளை ஒழித்துக்கட்ட நடபடிக்கைகள் எடுக்கப்படுகின்றன மன்னார்ப்பகுதியிலே மதுவிலக்கு இயக்கத்தில் முன்வழிகாட்டிய நானாட்டான் பகுதிமக்களை நாடு என்றும் மறக்கமுடியாது.

நாம் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு ஜெயம்பெறப் பலதுறைகளிலும் துணைபுரிந்தகட்டளைக்குரவர், கிராமச்சங்கத் தலைவர் K. M. மனுவேற்பிள்ளை ஆதியவர்கட்கும், வாக்காளர்கட்கும், ஏனைய ஆதரவாளர்கட்கும் கிராமமுன்னேற்ற சங்க சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் நன்றி சமர்ப்பிக்கின்றோம்.

A. சேபமாலை
கி. மு. ச. செயலாளன்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருவிருதய இரக்கத்தினாலும், அர்ச். ஆரோக்கியநாதர் மன்றாட்டினாலும் நான்கேட்டநன்மைகிடைக்கப்பெற்றேன். அவர்கள் நாமங்கள் புகழப்படுவதாக.

சி. அ. ஞானப்பிரகாசம்
சூராவத்தை

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 9 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org